www.tamilarangam.net


# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் 23-12-1994

அன்பளிப்பு 40P


**பெண்ணே!**

நீ அழுத கண்ணீர் தான்
இங்கு கடலாக...
நீ விடும் பெருமூச்சோ
இங்கு புயலாக...
என்று உன் சீற்றம்
துப்பாக்கி வேட்டாய்த் தீருமோ,
புரட்சிக் களத்தில்
உன் குருதி சிந்துமோ
அன்றுதான் உனக்கு விடுதலை.

-லெப்.துர்க்கா



# தமிழ் மக்கள் தமது உரிமைகள் பேணப்பட்ட உறுதியான நிரந்தரமான அமைதியினையே விரும்புகின்றனர்

## தமிழீழத் தேசியத் தலைவர் மீண்டும் வலியுறுத்து

"மக்கள் தமது உரிமைகள் பேணப்பட்ட, உறுதியானதும் நிரந்தரமானதுமான தீர்வையே விரும்புகின்றனர்" இவ்வாறு தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள், 'டைம்' (Time) இதழின் செய்தியாளர் அனிதா பிரதாப்புக்கு அளித்த செவ்வியில் மீண்டும் வலியுறுத்தினார். போரினால் தமிழ் மக்கள் சலிப்படைந்துவிட்டார்களா? என செய்தியாளர் கேட்டபொழுது, தலைவர் அவர்கள், "இது வெறும் பிரச்சாரம்; மக்கள் தமது உரிமைகள் பேணப்பட்ட உறுதியான நிரந்தரமான அமைதியையே விரும்புகின்றனர்" எனப்பதிலளித்தார்.

"சந்திரிகா அதிக அளவிலான சுயநிர்ணய உரிமையினை வழங்கினால், நீங்கள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிடுவீர்களா?" எனச் செய்தியாளர் கேட்டபோது, "நான் மாற்றுத்திட்டத்தைப் பார்க்கும்வரை இது குறித்து எந்தக் கருத்தையும் கூறமுடியாது" எனத்தலைவர் பிரபாகரன் அவர்கள் ஆணித்தரமாகக் கூறினார். சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? என்ற கேள்விக்கு, "செய்தித்தாள் செய்திகளைப் பார்க்கும் போது, சமாதானத்திற்காக அவர் முயற்சிப்பது போல் தெரிகிறது" எனக் கூறிய தலைவர் பிரபாகரன், "பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டதால், காலதாமதம் ஏற்பட்டுள்ளதா?" என்று செய்தியாளர் கேட்டபோது, "பேச்சுவார்த்தைகள் காலதாமதமடைவதாக நாம் புகார் கூறவில்லை;

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...



# விடுதலைப் புலிகள் தமது நோக்கை அடைவதை யாராலும் தடுத்து நிறுத்தமுடியாது

## - சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா

"தமிழீழ விடுதலைப் புலிகள் ஆற்றல்மிகுந்த, பலம் பொருந்திய, நன்கு திட்டமிட்டு அமைக்கப்பட்ட கெரில்லா இயக்கம். அவர்கள் தமது நோக்கை அடைவதை எந்தத் தடைகளாலும் தடுத்து, நிறுத்தமுடியாது".



இவ்வாறு சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா பிரபல்யமான உலக இதழான அமெரிக்க 'டைம்' வார இதழின் செய்தியாளர் அனிதா பிரதாப்புக்கு அளித்த செவ்வியில் குறிப்பிட்டுள்ளார். அவர் தமது செவ்வியில் மேலும், "யாழ்ப்பாண மக்கள் பிரபாகரன் அவர்களைத் தமது ஜனநாயகத் தலைவராகக் கருதுவார்களாயின், அதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்க முடியாது. எங்களுக்கு பிரபாகரன் அவர்களைக் கைதுசெய்ய வேண்டும் என்றோ விசாரணைகள் நடத்தவேண்டும் என்றோ எவ்வித உள்நோக்கமும் கிடையாது. அப்படிக் கருதமுற்பட்டு, அமைதியை ஏற்படுத்த முயன்றால், உலகில் எங்குமே அது சாத்தியமாகாது. இரு தரப்பினருக்கும் கௌரவமளிக்கக் கூடிய சமாதானம் தேவை. சிங்களவர்கள் நாங்கள் அதிகமாகக் கொடுத்துவிடுவோமோ என்று அஞ்சுகின்றார்கள்; தமிழர்களோ தங்களுக்கு அதிகமாக எதுவும் கிடைக்கப்போவதில்லை என்று கருதுகின்றார்கள்" என்றார். செய்தியாளர் இடைமறித்து, "எதைப்போன்றது, கௌரவமளிக்கக்கூடிய சமாதானம்" எனக் கேட்டதற்கு, திருமதி சந்திரிகா "தமிழர்களுக்கு கல்வியிலும் தொழில் வாய்ப்புக்களிலும் சமமான வாய்ப்பு அளித்தல்; தமிழ் மொழிக்கு சமமான அந்தஸ்து" எனப்பதிலளித்துள்ளார். நீங்கள் அதிவிரைவாக அமைதிக்குள் தள்ளுகிறீர்கள் என்று சிலர் குற்றம் சாட்டுகின்றனர் எனக்கேட்டபொழுது, "நாம் இருதரப்பினருக்கும் இடையில், முற்றாகவே முறிந்துபோயிருந்த பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கான தொடக்க முயற்சிகளையே தொடங்கியுள்ளோம்; முட்டாள்களை மாதிரி முழுத்தலையையும்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

# ஆனையிறவுப் பாதையைத் திறப்பதற்கு சிறீலங்கா பெருமுயற்சி

## பயணிகளைப் படையினரே சோதனையிடுவரெனத் தகவல்

பாப்பரசர் 2 ஆவது அருளப்பர் சின்னப்பரின் சிறீலங்கா வருகையைக் காரணமாக வைத்து, ஆனையிறவுப் பாதையை, படையினரின் கட்டுப்பாட்டுடனான பயணப்போக்குவரத்துக்கு திறப்பதற்க்கான முயற்சிகளில், சிறீலங்கா அரசு பெருமுயற்சி செய்துவருகின்றது. இதனைத் திறப்பதன் மூலம்,

1. தமிழீழ மக்களை படையினரின் சோதனைக்கு உள்ளாக்கி, அவர்களின் நடமாட்டச் சுதந்திரத்தை மட்டுப்படுத்தல்.
2. சிறீலங்காப் படையினரின் சுதந்திரமான தரைநகர்வுக்கும் ஆயுத தளபாட, ஊர்திகளின் (வாகனம்) நகர்வுகளுக்கும் வழியேற்படுத்தல் ஆகிய இருநோக்கங்களை நிறைவேற்ற சிறீலங்கா துடிக்கின்றது.

அதேவேளை இப்பாதை திறக்கப்பட்டால், சிறீலங்காப் படையே பயணிகள்மீது சோதனையிடுமென கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்காகவே அதாவது, தமிழீழ மக்களின் உயிர், உடைமைகளுக்கான தேசிய பாதுகாப்பை வழங்கவேண்டிய பொறுப்பிலுள்ள விடுதலைப் புலிகள், கேரதீவு -

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

# 'மோதல் தவிர்ப்பு'க்கு சிறீலங்கா முயற்சி

## விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொண்டுள்ளதாக சந்திரிகா தகவல்

சிறீலங்கா அரசபடைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில், 'மோதல் தவிர்ப்பு' ஏற்பாடொன்று விரைவில் ஏற்படுமென, சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா அலரி மாளிகையில் நடந்த செய்தியாளர் மாநாடொன்றில் கூறினார். ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து, பத்து நாட்களின் பின்னர், விடுதலைப் புலிகளுடன் சிறீலங்கா அரசு கடிதப் பரிமாற்றங்களைத் தொடங்கியுள்ளதாகக் கூறிய அவர், சிறீலங்கா அரசால், முன்வைக்கப்பட்ட மோதல் தவிர்ப்பு ஏற்பாட்டை விடுதலைப் புலிகள் ஏற்றுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும் நத்தார் திருநாளுக்கு முன்னதாக இம் மோதல் தவிர்ப்பு ஏற்பாடு, நடைமுறைக்கு வருமென எதிர்பார்க்கப்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, வடபகுதி மீதான பொருண்மியத்தடையை முற்றாக நீக்குமாறும் போர் நிறுத்தம் ஒன்றைப் பிரகடனம் செய்யுமாறும் கனடிய பாராளுமன்றத்தின் இரு உறுப்பினர்கள், சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவிடம் வலியுறுத்திக் கேட்டுள்ளனர்.

இதேவேளை, விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்ச போர் நிறுத்தத்தை மேற்கொண்டிருந்தவேளையில், சிறீலங்காப் படையினரால் படுகொலைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரான லெப். கேணல். மல்லி அவர்களுடைய கொலை குறித்து, உரிய விசாரணை நடாத்தப்படும் என, சிறீலங்காப் படைத்துறையின் தலைமையகம் விடுதலைப் புலிகளுக்கு அறிவித்துள்ளதாகக் கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. இதேவேளை சிறீலங்காப் படையினரின் இவ்விசாரணைக்கான அறிவிப்பு, அனைத்துலக சமூகத்தைத் திசை திருப்புவதற்கான, வெறும் கண்துடைப்பு முயற்சியென அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். ■

# அம்பாறையில் மீனவர் படுகொலை மக்கள் விசாரணைக்கு கோரிக்கை

## சிறீலங்கா அரசு மௌனம்

அம்பாறையில் ஆலடிவேம்பு -நித்தியடிகளப்பு என்ற இடத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த, 36 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான கார்த்திகேசு கருணாகரனும் 28 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையான சின்னவன் ஆகியோர் சிறீலங்கா அதிரடிப்படையினரால் மிகக்கடுமையாகத் தாக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட சம்பவம் அக்டோபர் மாதம் 29 ஆம் நாள் நடைபெற்றுள்ளது. இவர்களின் வெற்றுடல்களைக்கூட, அதிரடிப் படையினர் குடும்பத்தவர்களுக்குக் கொடுக்க மறுத்து, கடும் முயற்சியின் பின்னரே, சம்பவத்திற்கு மறுநாள் உறவினர்கள் பெற்றுக்கொண்டனர். இந்த மனிதாய வதைக்கெதிராக விசாரணை செய்யும்படி, அம்பாறை மக்கள் சிறீலங்காவின் புதிய அரசிடம் வேண்டுகோள் விடுத்தபோதிலும் இச்செய்தி அச்சுக்குப்போகும்வரை, சிறீலங்கா அரசு எவ்வித நடவடிக்கையையும் எடுத்ததாகத் தெரியவில்லை. ■

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்தியப் புலனாய்வுத் துறையினரால் புலிகளுக்குள் ஊடுருவ முடியவில்லை

ஐலண்ட்டில் தராக்கி

தென் இந்தியாவிலிருந்து இயங்கிய காலப்பகுதியில் மற்றைய தமிழ்க் குழுக்கள் போன்றல்லாது, விடுதலைப் புலிகள் அமைப்பு ஒன்று மட்டுமே, இந்தியாவின் எந்தப் புலனாய்வுப் பிரிவும் தனது அமைப்பிற்குள் ஊடுருவ அனுமதியாது செயற்பட்டது என, சண்டே ஐலண்டில் அதன் அரசியல் விமர்சகர் தராக்கி குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் ஒருபோதும் தனது அமைப்பின் முக்கிய தளபதிகளை இந்தியாவின் றோ அமைப்பிற்கோ, ஐ. பி. பிரிவிற்கோ, கியூ பிரிவிற்கோ அறிமுகம்செய்து வைக்கவும் இல்லை; காட்டவும் இல்லை.

ஆனால் ஏனைய தமிழ்க் குழுக்கள் தம்மிடையே உள்ள வேறுபாட்டினாலும் ஆயுதங்களின் தேவைக்காகவும் றோ அமைப்பின் ஊடுருவலுக்கு வழிவகுத்துக்கொண்டனர். விடுதலைப் புலிகள் இந்திய முகவர்கள் தமது அமைப்பினுள் செல்வாக்கைச் செலுத்துவதைத் தடுக்க அனைத்து முன்தடுப்பு நடவடிக்கைகளையும் எடுத்தனர் என்றும் அவர் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். ■

# ஏன் தமிழ் அரசியல்வாதி சபாநாயகராகவில்லை?

பாராளுமன்ற சபாநாயகராக தமிழ் அரசியல்வாதி ஒருவர் நியமிக்கப்படலாம் என அரசவட்டாரங்களில் பேச்சடிபட்டது தெரிந்தவிடயம்.

இப்போது ஏன் அவ்வாறு தமிழர் ஒருவரை நியமிக்க அரசு பின்வாங்கியது என்பதற்கு, காரணம் ஒன்றை கொழும்புச் செய்தித்தாள் ஒன்று வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியோ பிரதமரோ நாட்டில் இல்லாதவிடத்து, மூன்றாவது இடத்திலிருக்கும் சபாநாயகரே நாட்டில் தலைவராக வர இடமுண்டு. இந்த நிலைக்கு தமிழர் -அதுவும் வடக்கைச் சேர்ந்தவர் ஒருவர் நியமனமாவதை எதிர்த்த சிங்கள அரசியல்வாதிகளே, கே. பி. இரத்நாயக்காவை சிபாரிசு செய்ததாக அச்செய்தித்தாள் தெரிவித்துள்ளது. ■

# திவுலப்பிட்டியில் புதைகுழி; 35 பேரின் எலும்புக்கூடுகள் மீட்பு

திவுலப்பிட்டியிலுள்ள புதைகுழி ஒன்றை அண்மையில் தோண்டியபோது, பெருந்தொகையான மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவற்றுள் மண்டையோடுகள், முள்ளந்தண்டுகள், தோற்பட்டை எலும்புகள் என்பன காணப்பட்டன. கிடங்கிலிருந்து பெரிய ஆணிகள் சிலவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக்கிடங்கில் 25 தொடக்கம் 35 வரையிலானோர் புதைக்கப்பட்டிருக்கலாமென காவலர்கள் தெரிவித்துள்ளனர். 1989 ஆம் ஆண்டில் இப்பகுதியில் டயர்கள்மீது எரியும் சடலங்கள், ஒரு வாரகாலம்வரை விலங்குகளுக்கு இரையாகி வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# புலிகளின் நல்லெண்ணத்தை முன்னைய அரசு பயன்படுத்தத் தவறியது

□ கிறீஸ்தவ ஒன்றியத் தலைவர் ரியான்சி பெரேரா

"வடக்கு - கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, விடுதலைப் புலிகளின் தரப்பில் முன்னரே பல ஆக்கபூர்மான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன; ஆனால் சில அற்ப காரணங்களுக்காக அவற்றை சரிவரப்பயன்படுத்த முன்னைய அரசுகள் தவறிவிட்டன" என, கிறீஸ்தவ ஒன்றியத் தலைவரும், ஆங்கிலத் திருச்சபையின் முதன்மையாளருமான ரியான்சி பெரேரா தெரிவித்துள்ளார்.

அண்மையில் ரூபவாகினியில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அவர் இக்கருத்தைத் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில், "போர் தொடர்ந்து நடைபெற்றால், நாம் அனைவரும் எரிந்துவிடுவோம்; எனவே நாட்டின் நன்மையைக் கருத்திற்கொண்டு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க முன்வர வேண்டும்" என்றார்.

"இராணுவ நடவடிக்கை மூலம் இப்பிரச்சினையை என்றும் தீர்க்கமுடியாது; பத்தாண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் எதனைச் சாதித்தனர்? ஆனால் எவ்வளவு பாதுகாப்பான பகுதிகளிலும்கூட விடுதலைப் புலிகள் தமது தாக்குதல்ளை மேற்கொண்டுள்ளனர். தற்கொலைப் படைத் தாக்குதல் இருக்கும்வரை பாதுகாப்பைப் பலப்படுத்துவதால், பயன் எதுவும் இல்லை.

எனவே ஓர் அரசியல் ரீதியான தீர்வே அவசியமானது. இது பல கட்டங்களிலும் நடைபெறும்; சிலர் நினைப்பதுபோன்று இரண்டு, மூன்று கட்டங்களுடன் இதனை முடிவுக்குக்கொண்டுவர முடியாது. இது சிக்கல்வாய்ந்த பிரச்சினை. எனவே சிரமங்களை எதிர்நோக்கியே தீர்க்கப்படவேண்டும். இருதரப்பிலும் பலவிட்டுக்கொடுப்புக்கள் நடைபெறவேண்டும்.

இருதரப்பினரும் நட்புரீதியான பேச்சுக்களை மேற்கொள்ளவேண்டும்; இதன்மூலம் இருதரப்பு ஐயங்களும் நீக்கப்பட்டு, ஒருவரை ஒருவர் முழுமையாக நம்பக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படவேண்டும்" என, மேலும் அவர் தெரிவித்தார். ■

## அயல் நாட்டுச் செய்திகள்

# புலிகளை விரட்டியடிப்பதே காமினியின் கொள்கை

மகன் கூறுகிறார்

"விடுதலைப் புலிகளை நாட்டில் இருந்து முழுமையாக அகற்றுவதே காமினி திசாநாயக்காவின் கொள்கையாக இருந்தது" என, அவரது மகன் நவீன் திசாநாயக்கா தெரிவித்துள்ளார். இந்த நாட்டில் சிங்களத் தலைவர்கள் உருவாவதை விடுதலைப் புலிகள் விரும்பவில்லை என மேலும் அவர் தெரிவித்தார். ■

# புலிகளுடன் பேச்சு நடத்தாமல் அமைதித்தீர்வு சாத்தியமற்றது

"விடுதலைப்புலிகள் அமைப்புடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படாமல் அமைதித்தீர்வு காண்பது என்பது சாத்தியமற்றதாகும்". இவ்வாறு அரசு தரப்புப் பிரதிநிதிகளாக யாழ்ப்பாணம் சென்ற தூதுக்குழுவில் இடம்பெற்றிருந்த பிரமுகர் ஒருவர் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில், "விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படாமல் சமாதானத் தீர்வு காண்பது சாத்தியமற்றது; இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணப்படும் சாத்தியம் இல்லை. சிறீலங்கா இராணுவத்தினர் விடுதலைப் புலிகளை அடக்க எந்தவழிவகையுமின்றி இருக்கின்றனர். தாக்கிவிட்டு தப்பி ஓடும் தந்திரோபாயத்தை மேற்கொள்ளும் விடுதலைப்புலிகளை மடக்க, சிறீலங்காவின் போர் தந்திரோபாயத்திற்கு இயலாமல் இருக்கிறது. விடுதலைப் புலிகளின் தற்கொலைப் பாணி தாக்குதலை முறியடிக்க முடியாது" எனவும் தெரிவித்தார். ■

# நியதிகள்....

அக்கா இப்போது அமைதியாகச் சிரித்தாள்!

"நீ கண்ட, கண்ட புத்தகமெல்லாம் படிக்கிறியாம்... உனக்கிப்ப சிநேகிதங்களும் சரியில்லையாம்... அம்மா கவலைப்பட்டவ... எங்கடை குடும்பம் அடக்கமாகவும் அமைதியாகவும் வாழ்ந்த குடும்பம்... நீயும் நாலு பேற்றை கண்ணிலை படுற மாதிரி நடவாதை..."

அக்கா என்ன சொல்லுகிறாள் என்பது சடாரென்று புரிந்தது!

"உனக்குக் கீழை விஜயாவும்... கவிதாவும் இருக்கிறாளவை... நீ நடக்கிறதைப் பார்த்துத்தான் அவளவையும் நடப்பாளவை... அதுக்கேத்த மாதிரி நீ அடக்கமா இரு..."

"நான் இப்ப நடக்கிறதிலை என்ன பிழை கண்டுபிடிச்சிருக்கிறியள்...? என் கேள்வியில் கொஞ்சம் சினம் எட்டிப் பார்த்தது!

"நீ எங்களைவிடக் கூடப்படிச்சனி... கைநிறைய சம்பளம் எடுக்கிறாய் எண்டு உனக்கு நினைப்பிருக்கலாம்... பொம்பிளையள் என்னதான் படிச்சாலும் என்னதான் உழைச்சாலும் கலியாணம் கட்டினா, புருசனுக்கு அடிமைதானை..." எனக்கு கோபம் குப்பென்று மூண்டது... ஆனால் நான் வாயே திறக்கவில்லை!

"எல்லாம் உன்ரை நன்மைக்காகத்தான் சொல்லுறன்... நாளைக்கு உனக்கெண்டு ஒரு வாழ்க்கை அமைஞ்சா, நீ கஸ்டப்படக் கூடாதெல்லோ..."

அக்கா இன்னும் ஏதோவெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தாள்! அக்காவின் வார்த்தைகள் புரியவில்லை!

அடக்கம் என்றபெயரில் தங்களைச் சுற்றி ஒரு அடிமைச் சிறையைப் போட்டிருக்கும் அக்கா, அக்கா போன்றவர்களுக்கு எப்போது விடியப் போகிறது? அக்கா போன்றவர்கள் இருக்கும்வரை அத்தான் போன்றவர்களும் இருக்கத்தான் செய்வார்கள்! இந்த நியதிகள் மாறும்வரை... இப்படித்தான் இவர்களின் வாழ்க்கை கழியப்போகிறது!

ஆனால்... நிச்சயமாக என் போன்றவர்களின் வாழ்க்கை இப்படியல்ல!

அம்மாவின் வாழ்க்கை போல... அக்காவின் வாழ்க்கைபோல அல்ல... எங்களின் வாழ்க்கை. நியதிகளை மாற்றிய நிரந்தர வாழ்க்கையாகவே இருக்கும்!

நம்பிக்கையோடு யன்னலைக் கடந்து, என்பார்வை விரிகிறது... வானத்தில் குருவிக் கூட்டமொன்று அலை, அலையாகப் பறக்கிறது! ■

## யேர்மனியில்

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்திய இரங்கும் இன்னிசை இரவு

தமிழர் புனர்வாழ்வுக் கழக யேர்மன் கிளையினர் யேர்மன் நாட்டின் பல பாகங்களிலும், 'இரங்கும் இன்னிசை இரவு' என்ற பெயரில் கலை நிகழ்ச்சிகளை நடாத்தி, இன்னலுறும் ஈழத்தமிழருக்கு உதவிகோரி வருகின்றனர். 1994 ஆம் ஆண்டின் இறுதி நிகழ்ச்சியாக 'ஓபகௌசன்' நகரில் 10-12-1994 அன்று இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழீழத்தின் தென்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வந்து, ஆதரவற்று நிற்கும் 25,000 இற்கும் அதிகமான மக்கள் அடங்கிய, 5000 இற்கும் அதிகமான குடும்பங்களுக்கு வீடமைத்துக் கொடுத்தல், சுகாதார வசதி, பாடசாலைகள் அமைத்தல், வைத்திய வசதி, சுயதொழில் வாய்ப்பு ஆகியவற்றைச் செய்து கொடுத்தல் போன்ற வேலைகள் அடங்கிய பெரியதொரு வேலைத் திட்டத்தை, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யேர்மன் கிளை பொறுப்பேற்றுச் செய்து வருகின்றது.

இந்தப் பாரிய திட்டத்துக்கு உதவுமுகமாக, யேர்மன் நாட்டில் புனர்வாழ்வுக் கழகம் 1994 ஆம் ஆண்டில் நடாத்திய பன்னிரண்டாவது நிகழ்ச்சி இதுவாகும்.

இந்த நிகழ்ச்சியின் தொடக்கத்தில், ஒளிப்பட விபரணங்கள் மூலம் நாட்டின் உண்மைநிலையும் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியும் காட்டப்பட்டது. சிறப்புரை வழங்கிய உலகத்தமிழர் இயக்க கல்விப்பணிப் பொறுப்பாளர் பேசும்போது, "தமிழீழம் என்று எமக்கு ஒரு நாடு கட்டப்படுகின்றது; அந்த கட்டுமானப் பணிக்கு உதவவேண்டியது எமது கடமை" என வலியுறுத்தினார்.

"பாட்டு வாத்தியாரும் மோட்டு வேலைக்காரனும்" என்ற நகைச்சுவை உரையாடலும், "கடவுளைக் கண்டேன்" என்ற கதாப்பிரசங்கமும், "இன்னுமா உறக்கம்" என்ற நாடகமும் வரவேற்பைப்பெற்றன.

சிறப்பான நடனங்களும், 'தமிழீழம்' இசைக்குழுவின் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றன. 'தமிழீழம்' இசைக்குழுவினர் பத்து ஆண்டுகளாகப் பயன்படுத்திய மேலைத்தேய வாத்தியக்கருவி ஏலத்தில் விடப்பட்டபோது, ஏலவிற்பனையில் சூடுபிடித்தது; ஏலவிற்பனைக்கான கேள்வி ஏறிக்கொண்டேபோனமை, தமிழீழ உணர்வை வெளிப்படுத்தியது. மங்கள வாத்திய இசை தொடங்கியபோது, நாட்டில் நடக்கும் ஒரு விழாவில் கலந்துகொள்ளும் மனநிலையே உருவானது.

1994 ஆம் ஆண்டுக்கான அதிஸ்டலாபச்சீட்டுக்கள் குலுக்கப்பட்டு, அதிஸ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

முதற் பரிசாக 5000 DM உம் இரண்டாம் பரிசாக 3000 DM உம் மூன்றாம் பரிசாக 1000 DM உம் மேலும் 25 ஆறுதற் பரிசுகளும் வழங்கப்பட்டன.

உதவும் எண்ணம் நிறைந்த, தமிழர் மகிழும் ஒரு விழாவாக இது அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலே குறிப்பிடப்பட் அதிர்ஸ்டலாபச்சீட்டிழுப்புக் குலுக்கலில், தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஸ்ட எண்கள் பின்வருமாறு:-

**முதலாவது** பரிசுக்குரிய எண்: 1906 சவுத்திரி OFFENBACH.
**இரண்டாவது** பரிசுக்குரிய எண்: 1306 நவறட்ணம் BOCHUM.
**மூன்றாவது** பரிசுக்குரிய எண்: 3145 தேவி NEUSS.

ஆறுதல் பரிசுக்குரிய எண்கள்: 2218, 3543, 4602, 6169, 00-58, 4859, 4876, 4873, 4638, 4624, 4101, 2559, 4025, 01-66, 2922, 2144, 2150, 4731, 4338, 0555, 1702, 2005, 68-64, 1281, 2633. ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மக்களின் விருப்பு

**ச**மீபத்தில் அமெரிக்க, 'டைம்' (TIME) இதழுக்கு செவ்வியளித்த சிறீலங்கா ஜனாதிபதி, "கௌரவமான அமைதி என்பது இருதரப்பினருக்கும் மதிப்பளித்தல்" என முதலில் கூறிவிட்டு தொடர்ந்து, "நாங்கள் தமிழர்களுக்கு அதிகமாகக் கொடுத்துவிடுவோமோ என்று சிங்களவர்கள் அஞ்சுவதாகவும், தங்களுக்கு அதிகமாக எதுவும் கிடைக்கப்போவதில்லை என்று தமிழர்கள் கருதுவதாகவும்" கூறியுள்ளார். "கௌரவமான அமைதி" என்பது எதைப் போன்றது எனக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த சந்திரிகா, "தமிழர்களுக்கு கல்வி, வேலை வாய்ப்புகளில் சமத்துவம், தமிழ் மொழிக்குச் சமமான அந்தஸ்து" என விளக்கியுள்ளார். அத்துடன், "சமாதானத்திற்கு முன்னுரிமை கொடுப்பதுடன் அதுவே முக்கிய தெரிவாகவும் உள்ளது; நாங்கள் சிங்களப் பெரும்பான்மையினருக்கு மட்டுமல்ல, விடுதலைப் புலிகளை உள்ளடக்கிய தமிழர்களுக்கும் அரசாங்கம் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். எல்லோரையும் விட தமிழர்களுக்கு அமைதி தேவை. அதேவேளை சிங்களவர்களுக்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம். மற்றைய எல்லா முயற்சிகளும் பிழைக்குமானால் இராணுவ நடவடிக்கையை நான் ஒதுக்கித் தள்ளமாட்டேன். விடுதலைப் புலிகள் நாட்டின் ஏனைய பகுதிகளின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய முறையில் செயற்பட்டால், நாங்கள் இராணுவ முயற்சிகளில் இறங்குவோம்" எனவும் சந்திரிகா தெரிவித்துள்ளார்.

**சந்திரிகா அவர்களின் இந்தக் கருத்துக்கள்:**

(1) அவர்கள் (சிங்கள அரசு) கொடுப்பவர்கள் அல்லது ஆள்பவர்கள் தமிழர் பெறுபவர்கள் அல்லது ஆளப்படுபவர்கள்

(2) இவ்வகையில் அவர்கள், விடுதலைப்புலிகள் உட்பட்ட தமிழர்கள் அனைவருக்கும் அரசு என்ற வகையில் அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

(3) அம் முயற்சிகள் தோற்றால் அமைதியைத் தேடும் தமிழர்களுக்காகவும் சிங்களவர்கள் மட்டில் உள்ள கடப் பாட்டுக்காகவும் இராணுவ நடவடிக்கையை ஒதுக்க முடியாது.

(4) கௌரவமான அமைதி என்பது, "தமிழர்களுக்கு மொழிப் பயன்பாட்டில், கல்வி -வேலை வாய்ப்புக்களில் சமத்துவம்" எனும் நிர்வாகப் பரவலாக்கம்.

என்ற நோக்குகளையே வெளிப்படுத்துகின்றன.

இரு தேசிய இனங்களும் 'நாட்டினங்கள்' (Nations) என்பதையோ 'வேற்றுமையில் ஒற்றுமையாக வாழ்தல்' என்பதையோ ஏற்றுக்கொள்ளாது, இந்த அடிப்படையிலான தேசநிர்மாணப் போக்கிற்கு (Nation Building Process) முற்றிலும் எதிரான வகையில் ஆளும் உரிமையுள்ள சிங்களவர்கள், சிறுபான்மை இனத்தவரான தமிழர்களுக்கு சமத்துவ சந்தர்ப்ப வாய்ப்பினை (Equal opportunity policy) உருவாக்குதல் அடிப்படையிலான தீர்வு அணுகுமுறையினையே சந்திரிகாவின் செவ்வி வலியுறுத்துகின்றது. ஜோன் ஆஸ்ரீன் கூறுவது போன்று, பிரித்தானிய முறையிலான பாராளுமன்ற முறைமையில் இறைமையானது மக்களிடமோ அல்லது மக்களின் தலைவர்களிடமோ தங்கி நிற்காது, பாராளுமன்ற சர்வாதிகாரத்துள் (Monarch in Parliament) தங்கி விடுகின்றது. இதனால் உருவாகும் 'தெரிவு செய்யப்பட்ட சர்வாதிகாரம்' (Selective Dictatorship) அல்லது 'நவீன அதிகார குவிப்புள்ள தலைமை' (Modern Autocracy) யானது, தாமே எல்லா நாட்டினங்களதும் எதிர்கால அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் தகைமையுள்ளவர்கள் என்ற போக்கில் இயங்கத் தொடங்கி விடுகின்றது. இதுவே தேசிய இன முரண்பாடுகளுக்கு வித்தாக விளங்குகின்றது.

'சிறீலங்காவுக்கு எதிரான பேதங்கள்' (Indictment against Sri Lanka) என்ற நூல், "சிறீலங்கா ஏற்படுத்திய பேதங்களால் தமிழ் நாட்டினம் தன்னைத்தானே தெளிவான தனியான நாட்டினமாக வெளிப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டமை" பற்றி விளக்கும்போது தமிழ் தேசிய வாதத்தின் அரசியல் சக்தியானது, பங்கீடு செய்யப்படும் பண்பாட்டுப் பாரம்பரியம், தற்போதைய ஒடுக்குமுறைகள் ஏற்படுத்திய இறுக்கமான சமூக ஒற்றுமையின் பலம், மக்கள் தங்களுடைய எதிர்கால அபிலாசைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற நோக்கு ஆகியவற்றில் வேர் கொண்டுள்ளது எனக் கூறுகின்றது.

இதனைப் பிரதிபலிக்க கூடியவகையில் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் அமெரிக்க 'டைம்' (Time) இதழுக்கான செவ்வி அமைகின்றது. "தமது உரிமைகள் பேணப்பட்ட உறுதியான நிரந்தரமான அமைதியையே தமிழ் மக்கள் விரும்புகின்றனர்" எனத் தலைவர் பிரபாகரன் ஆணித்தரமாக மீண்டும் வலியுறுத்துகின்றார். மக்களின் எதிர்கால அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய (People's aspirations for their future) அமைதிதான் இன்றைய காலத்தின் தேவை. இதனைத் தரக்கூடிய தொழில் நுட்ப அமைப்பினை மாற்றுத்திட்டமாக உருவாக்க வேண்டிய பொறுப்பு சிறீலங்கா அரசினுடையது. இதனால் தான், "மாற்றுத்திட்டத்தை பார்க்கும் வரை நான் இது குறித்து எந்த அபிப்பிராயத்தையும் கூறமுடியாது" எனத் தலைவர் பிரபாகரன் விளக்கியுள்ளார்.

அரசியல் இறைமையானது சட்ட அதிகாரத்துக்கான கோரிக்கையில் தங்கியிருக்கவில்லை, உண்மையான அதிகாரப் பகிர்வு யாரிடம் இருக்கின்றது என்பதிலேயே தங்கியுள்ளது. அமெரிக்க 'டைம்' செய்தியாளர் அனிதா பிரதாப், விடுதலைப்புலிகளின் கீழ் இயங்கும் அமைச்சரவை, காவல் துறை (Police Force), நீதி பரிபாலனம் என்பவற்றை ஒரு வடிவமாக்க் குறிப்பிடுவது, தமிழீழத்தின் இறைமை யாரிடம் உள்ளது என்பதைத் தெட்டத் தெளிவாக்கிறது. இதனை அரசு நோக்கிய அரசிறைமை (Defacto Sovereignty) என்பர். இதையே சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா, "விடுதலைப் புலிகள் தமது நோக்கை அடைவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது" என்று தமது வார்த்தைகளால் தெளிவாக்குகிறார். இவ்விதம் தெளிவாகப் பேசும் சந்திரிகா, "தமிழர் ஒரு நாட்டினம்; தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையிலான அரசு நோக்கிய அரசினைக் கொண்டிருப்பவர்கள்" என்ற உண்மையின் அடிப்படையில் 'கௌரவமான அமைதி'யை ஏற்படுத்துவாரா என்பது அவர் வழங்கப்போகும் தீர்விலேயே தங்கியுள்ளது. "பெளத்த பேரின வாதத்தினை வெல்லுவாரா அல்லது சூழ்நிலைக் கைதியாகப் போகிறாரா" என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒன்று. சுருக்கமாகச் சொன்னால் தலைவர் பிரபாகரன் கூறியிருப்பது போல், "உறுதியான நிரந்தரமான தமது உரிமைகள் பேணப்பட்ட அமைதியே" தமிழீழ மக்களதும் உலகில் பரந்து வாழும் தமிழீழ மக்களதும் விருப்பாக உள்ளது. ■

# முயன்றால் முடியாதது எதுவுமில்லை

**ந**மது சமூகத்தில் ஒரு பெண்ணினது தன்னியல்பான நடவடிக்கைகள் அடங்காப்பிடாரித்தனமாகவும், அவளது அடிப்படை உரிமைகள் கேலிக்குரிய விடயமாகவுமே நீண்ட காலமாகக் கருதப்பட்டு வருகின்றன. உரிமைக்குரல் எழுப்ப முனையும் ஒவ்வொரு பெண்ணும் முனையிலேயே நசுக்கப்படுகின்றாள். இதையும் மீறி எழுகின்ற பெண், 'பெண்ணாகக் கருதப்படுவதில்லை'.

இப்படியான ஒரு சூழலில், தம் மீது போடப்பட்ட வலைப் பின்னல்களை விலக்கிக்கொண்டு ஒரு பெண்கள் அணி எழுந்தது. பயிற்சிகளைப் பெற்று ஆயுதத்தை ஏந்தியவாறு தாயக பூமியிலே நடமாடியது. அந்தப் பெண்கள் குழு, சமூகம் தம்மீது விதித்திருந்த தடைகளை அறுத்தெறிந்துவிட்டிருந்தது.

இந்த இடத்தில் நாம் ஒன்றை ஆழமாக நோக்க வேண்டியுள்ளது. சமூகத்தின் இறுக்கமான கட்டுக்களை உடைத்து வெளியேறியதால் இவர்கள் ஒழுக்கமற்றவர்களாகவில்லை. மாறாக நேர்மையையும், ஒழுக்கத்தையும் முதன்மையாகக் கடைப்பிடிப்பவர்களாக, ஆனால் பிற்போக்கான மூடக் கொள்கைகளை தூக்கியெறிந்தவர்களாக வாழ்ந்தனர். இவர்களின் இந்தப் புதிய வாழ்க்கை தமிழீழ மக்கள் சமுதாயத்தையோ, தமிழ்ப் பாரம்பரியத்தையோ எந்த வகையிலும் பின்னடையச் செய்யவில்லை. இத்திருப்பம், ஆரோக்கியமான ஒன்றாகவே அமைந்தது.

இந்த ஆரோக்கியமான மாற்றத்தை நமது சமூகம் புரிந்து கொள்ளத் தவறிவிட்டது. அதனால்தான் இன்னமும் பெண்கள் மீதான பழைய கட்டுப்பாடுகளைத் தளர்த்தாமல், கட்டிக் காத்து வைத்திருக்கின்றது. ஆனால் இளைய தலைமுறைப் பெண்கள் இந்த மாற்றத்தைச் சரியாகவே புரிந்துகொண்டுள்ளனர். அதனால்தான் நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற தமது உரிமைகளைப் பற்றி யோசிக்கின்றனர்; அதை மீட்க முயல்கின்றனர். இதனால் ஒரு கருத்துலக மோதல் தோன்றியுள்ளது.

**தமிழ் மக்களின் பிற்போக்குக் கருத்துலகமும் முற்போக்குக் கருத்துலகமும் மோத ஆரம்பித்துள்ளது. போராடப் புறப்பட்ட பெண்களணி, முற்போக்குக் கருத்துலகத்தை தன் நடவடிக்கைகளால் வலுப்படுத்துவதன் மூலம் பழைமை வாதத்தை விரட்ட முனைந்துகொண்டிருக்கின்றது.**

வேலிக்கு வெளியே கால் வைக்க அனுமதிக்காத சமூகத்திலிருந்து புறப்பட்ட இவர்கள், காடு மேடெல்லாம் பகலிரவாக அலைந்து திரிந்து இந்திய இராணுவத்துடன் மோதினர். பெரு வெளிகளிலே எதிரிக்கு எதிராகக் களம் அமைத்தனர். அதிசக்தி வாய்ந்த, கனமான ஆயுதங்களையெல்லாம் சுமந்து திரிகின்றனர்; எதிரியின் எல்லைக்குள் சத்தமிடாமல் நுழைந்து வேவு பார்க்கின்றனர்; ஆழக்கடலில் படகோட்டுகின்றனர்; எதிரியின் கடற்படையைப் பலவீனப்படுத்துவதற்காக தன்னையே கொடுத்து, எதிரிக் கப்பல்களை மூழ்கடிக்கின்றனர்.

**இளைய பெண்கள் சமுதாயம் இந்த மாற்றத்தை மிகச் சரியாகப் புரிந்துகொண்டு விழித்தெழ வேண்டும். விழிப்புக் கொண்ட ஒரு பெண் சமுதாயத்தினால், தான் ஒடுக்குமுறை விலங்குகளை உடைக்க முடியும். மண் மீட்புப்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்தக் காலம்தான், பெண்ணினம் தம்மை மீட்க எழுவதற்குரிய சரியான காலமாகும்.**

எமது இயக்கத்தில் முதற் களப்பலியான பெண்புலி 2 ஆம் லெப். மாலதியிலிருந்து கடற்கரும்புலிகள் கப்டன் அங்கயற்கண்ணி, லெப். கேணல். நளாயினி, மேஜர் மங்கை வரை ஒன்றை உலகத்துக்கு நிருபித்திருக்கின்றார்கள், 'பெண்கள் முயன்றால் முடியாது எதுவுமில்லை' என்பதே அது. ■

# புலிகளின் மகளிர் படையணியினர் வெற்றிலைக்கேணியில் அதிரடி

## அதிகாரி உட்பட ஐந்து படையினர் பலி

**வெ**ற்றிலைக்கேணி முகாம் படையினர்மீது, அண்மையில் விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியினர் நடாத்திய தாக்குதலில், படை அதிகாரி உட்பட ஐந்திற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர்; ஆயுதமும் கைப்பற்றப்பட்டது.

காலை 6. 50 மணியளவில் வெற்றிலைக்கேணி படை முகாமிலிருந்து வெளியேறிய படையினர், முகாம் சுற்றாடலில் உள்ள தடைகளை அகற்ற முற்பட்ட வேளை, விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியினர் இத்துணிகரத் தாக்குதலை மேற்கொண்டனர்.

படை முகாமிலிருந்து சுமார் 175 மீற்றர் தூரத்தில்வைத்து மகளிர் படையணியினர் நடாத்திய இத் தாக்குதலின்போது, படை அதிகாரி உட்பட ஐந்திற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். மகளிர் படையணியினர் தரப்பில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

இம்மோதலைத் தொடர்ந்து படையினரிடமிருந்து, ஏ. கே. எல். எம். ஜி. - 1. லிங்குடன் ரவை - 100 ஆகியவற்றை மகளிர் படையினர் கைப்பற்றினர். ■

# புகையிரதப்பாதையில் காய்கறி பயிர்ச்செய்கை

**தீ**வக மக்கள் தங்கியுள்ள ஸ்ரீபன் குடியிருப்பில் (யாழ். புகைவண்டி நிலையம்), குடியிருப்பு மக்களால் புகைவண்டிப் பாதையில் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை விந்தைக்குரியதொன்றாகக் காணப்படுகின்றது. முன்னைய காலங்களில் புகைவண்டி ஓடிய தண்டவாளங்கள் இருந்த பாதையில், இப்போது காய்கறிப் பயிர்களும் வாழை, பப்பா போன்ற பழமரங்களும் செழித்து வளர்ந்து காட்சியளிக்கின்றன. புகைவண்டி ஓடிய பாதையைக் கொத்தி, பண்படுத்தியதன் மூலம் 'தோட்டநிலம்'போல் ஆக்கிய மக்கள், அதிலே சீவனோபாய முறையில் இப்பயிர்ச்செய்கையை மேற்கொண்டுவருகின்றனர். குடியிருப்பின் ஏனைய இடங்களைவிட, இவ்விடத்திலேயே பயிர்கள் செழித்து வளர்ந்து, பயனளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ■

# மாதிரி வீடமைப்பு...

கரிகாலன் சனசமூக நிலையம், போசாக்கு புனர்வாழ்வு நிலையம் என்பவற்றை தென்மராட்சிக் கோட்ட அரசியற் துணைப்பொறுப்பாளர் திரு. கலைவாணன் அவர்களும், மருத்துவ நிலையத்தை தீவகக்கோட்ட மகளிர் அமைப்பின் குடியிருப்புப் பொறுப்பாளர் செல்வி கலைமதி அவர்களும், தையல் பயிற்சி, நிலையத்தை திரு. சி. இளம்பரிதி அவர்களும் வைபவரீதியா கத் திறந்துவைத்தனர். ■

**"ஒடுக்கப்படும் மக்களே ஒடுக்குமுறைக்கெதிராகப் போராடவேண்டும். அநீதிக்கு ஆளாகி நிற்பவர்களே அநீதியை ஒழித்துக்கட்ட முன்வர வேண்டும். இந்த வகையில், பெண் அடிமைத்தனத்துக்கு எதிராக பெண்களே போர்க்கொடி உயர்த்தவேண்டும்; போராடவேண்டும். இந்தப் போராட்டம் ஒரு தேசிய விடுதலை அமைப்பின் பக்கபலத்துடன் முன்னெடுக்கப்படுமானால், அது வலுமிக்க சக்தியாக வெற்றியைப் பெற்றுத் தரும்."**

**- தமிழீழத் தேசியத் தலைவர்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரசியலமைப்பு

## ஜேயாரால் ஜேயாருக்காக ஜேயாருடைய

### ஜனாதிபதியின் அதிகாரமும் அவரைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடும்

ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைப் பற்றி, முன்கண்ட அவரது பின்னணியையும் அவரது நோக்கங்களையும் மனதிற்கொண்டு, அதனடிப்படையில் ஜனாதிபதிப் பதவியின் உருவாக்கத்தை ஆராய்வோம்.

ஜனாதிபதி அரசின் தலைவர், அரசாங்கத்தின் தலைவர், முப்படைகளின் தலைவர், அமைச்சரவையின் தலைவர் மட்டுமன்றி, அமைச்சர் பதவியைத் தானே வகிக்கக்கூடியளவிற்கு அமைச்சரவையின் ஓர் உறுப்பினரும்கூட.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கூட்டவும் -கலைக்கவும் அமர்வுகளை நிறுத்தக்கூடிய அதிகாரமுள்ளவர் என்பதுடன், அமர்வு ஒவ்வொன்றின் தொடக்கத்திலும் அரச கொள்கைக்கூற்றை வாசிப்பதற்கும் -நாடாளுமன்றத்தின் சடங்குமுறையான இருக்கைகளுக்குத் தலைமை தாங்குவதற்கும் -அதிகாரமுள்ளவர் ஆவார்.

போர், சமாதானம் என்பவற்றைப் பிரகடனம் செய்வதற்கும் அதிகாரமுள்ளவர்.

இவ்வாறாக அவரது அதிகாரப் பட்டியல் நீண்டுசெல்கின்றது.

இத்துணை அதிகாரங்களுடனும் ஒருவர் ஜனாதிபதியாக பதவியில் அமர்த்தப்பட்டபின், அவரது பதவியை எவ்வளவுதூரம் பாதுகாக்க இயலுமோ, அவ்வளவு தூரம் பாதுகாப்பதற்கு ஏற்றவிதத்தில் அரசியற் திட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் ஜனாதிபதி வரம்பை மீறித் துணிந்து செயற்படக்கூடிய பின்னணியே உண்டு. மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை விடவும், ஜனாதிபதியின் பதவியைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் பலமானவை.

ஜனாதிபதி தானாகப் பதவி விலகினாலே தவிர, அவரைப் பதவியில் இருந்து விலக்குவதற்கு மூன்று வழிகள் உண்டு. அவையாவன:

1. ஜனாதிபதிக்குப் பைத்தியம் பிடித்துள்ளது அல்லது அவர் செயற்பட முடியாத அளவிற்கு நோயுற்றுள்ளார் எனக் காணுமிடத்து,

2. ஊழல், மற்றும் தேசத்துரோகம் போன்ற பாரியகுற்றங்களுக்கு உள்ளாகியுள்ளார் எனக் காணுமிடத்து,

3. அரசியல் அமைப்புத் திருத்தம் ஒன்றின்மூலம் ஜனாதிபதிப் பதவியை இல்லாது செய்யுமிடத்து.

இம்மூன்றில் எந்த ஒன்றை நிறைவேற்ற வேண்டுமாயினும், நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவைப் பெறவேண்டும். முதல் இரண்டிற்கும் உயர்நீதிமன்றத்தின் சம்மதத்துடன்கூடிய வகையில் 2/3 பங்கு உறுப்பினரின் ஆதரவும், மூன்றாவதற்கு 2/3 பங்கு உறுப்பினரின் ஆதரவுடன், மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பின் மூலமான மக்களின் சம்மதத்தினையும் பெறவேண்டும்.

இதனால் ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்குத் தனித்துக் கிடையாது என்பதுடன், நாடாளுமன்றம் ஒன்றில் நீதிமன்றத்துடன் இணைந்தோ அன்றி மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்புடன் இணைந்தோதான் ஜனாதிபதியைப் பதவி நீக்கம் செய்யலாம். இவற்றை விடவும் இவற்றிற்கான நடைமுறை மேலும் கடினமானது. அதனைப் படிமுறையாக நோக்குவோம்.

ஜனாதிபதி பைத்தியத்திற்கு உள்ளாகியுள்ளார் அல்லது செயற்பட முடியாதளவிற்கு நோயுற்றுள்ளார் என்றோ அல்லது ஜனாதிபதி குற்றச்சாட்டிற்கு உரியவரென விபரமான குற்றப்பத்திரத்துடனோ, நாடாளுமன்ற உறுப்பினரின் மொத்த உறுப்பினர் தொகையில் அரைவாசிப் பேரிற்குக் குறையாதோர் கையெழுத்திட்டு, சபாநாயகரிற்கு முகவரியிட்டு சபாநாயகரிடம் சமர்ப்பிக்குமிடத்துச் சபாநாயகரும் அதனை ஏற்றுக்கொள்ளுமிடத்து, நாடாளுமன்ற விவாதத்திற்குரிய நிகழ்ச்சிநிரலில் அதனைச் சேர்த்துக்கொள்ளலாம். அவ்வாறு சபாநாயகரின் சம்மதம் அதற்கு இல்லாத இடத்து, மொத்த உறுப்பினர் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினரின் கையெழுத்து இருந்தால் மட்டுமே, நிகழ்ச்சி நிரலில் சேர்க்கலாம்.



இவ்வாறு நிகழ்ச்சி நிரலில் இடம்பெறின், பின்பு விவாதம் நிகழும். விவாதம் முடிந்ததும் மொத்தஉறுப்பினரின் 2/3 பங்கு உறுப்பினரின் வாக்குகளால் ஜனாதிபதிக்கு பைத்தியம் பிடித்துள்ளது என்றோ செயற்பட முடியாதளவிற்கு நோயுற்றுள்ளார் என்றோ அல்லது குற்றத்திற்குரியவர் என்றோ கருதி, உயர்நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப் படவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்படுமிடத்து சபாநாயகர் அதனை விசாரணைக்காக உயர்நீதிமன்றத்திற்கு சமர்ப்பிப்பார்.

உயர்நீதிமன்றம் விசாரணையை முடித்துக்கொண்டு ஜனாதிபதிக்கு பைத்தியம் பிடித்துள்ளது என்றோ செயற்பட முடியாதளவிற்கு நோயுற்றுள்ளார் என்றோ அல்லது குற்றவாளிதான் என்றோ தீர்மானித்து அதுபற்றிய ஓர் அறிக்கையை சபாநாயகரிடம் சமர்ப்பிக்குமிடத்து, உயர்நீதிமன்றத்தின் அறிக்கை எனப்படும் தீர்ப்பை சபாநாயகர் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பிற்கு விடலாம். அப்போது மொத்த உறுப்பினரில் 2/3 பங்கிற்கு குறையாதோரின் வாக்குகள் ஜனாதிபதிக்கு எதிரானதாக அளிக்கப்பட்டால் மட்டுமே அவர் பதவி விலக்கப்படுவார்.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு என்று சொல்லத்தக்க அறிக்கையில், ஜனாதிபதிக்குப் பைத்தியம் பிடித்

## அத்தியாயம் - 4

துள்ளது அல்லது அவர் செயற்படமுடியாதளவிற்கு நோயுற்றுள்ளார் என்றோ சொல்லப்படாதிருந்தால், அல்லது குற்றவாளி என்றோ சொல்லப்படாதிருந்தால், நாடாளுமன்றத்தில் அது வாக்கெடுப்பிற்கு விடப்படமாட்டாது. அவர்பதவி விலக்கப்படவும் மாட்டார்.

மேற்படி விபரங்களின்படி ஜனாதிபதியைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமாயின், நான்கு கட்டங்களைத் தாண்டவேண்டும். மேற்படி நான்கு கட்டங்களிலும் சம்மதம் கிடைத்தால் மட்டுமே, அவரைப் பதவி விலக்கலாம். இந்த நான்கு கட்டங்களுள் ஏதாவது ஒன்றில் ஜனாதிபதிக்குச் சாதகமான தீர்மானம் கிடைத்துவிட்டால் அத்துடன் பதவி நீக்குவதற்கான முயற்சி கைவிடப்படும். உதாரணமாக ஜனாதிபதிக்குப் பைத்தியம் பிடிக்கவில்லை அல்லது அவர் குற்றவாளியல்ல என்று உயர் நீதிமன்ற அறிக்கை அமையுமானால், பின்பு மேற்கொண்டு நாடாளுமன்றத்தில் அது வாக்கெடுப்பிற்கு விடப்படாமல் இரத்தாகிவிடும். இங்கு விசித்திரம் என்னவெனில், ஜனாதிபதிக்குப் பைத்தியம் இல்லை என்று நீதிமன்றம் அறிக்கை சமர்ப்பித்தால், அதை நம்பி நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நிகழாது. ஆனால் பைத்தியம்தான் என்று அறிக்கை சமர்ப்பித்தால் அதை நம்பாது 2/3 பங்கு வாக்கை நாடாளுமன்றத்தில் பெறவேண்டும்.

மூன்று தடவைகளும் மிகக் கடினமான ஏற்பாடுகளுக்கூடாக நாடாளுமன்றத்தின் சம்மதத்தைப் பெற்று, ஒரு தடவை நீதிமன்றத்தின் சம்மதத்தைப் பெற்ற பின்புதான், ஜனாதிபதியைப் பதவி விலக்கலாம். நாடாளுமன்றம், நீதிமன்றம், மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு ஆகிய எந்த ஓரங்கத்தாலும் தனித்து எடுக்கப்படும் முடிவினால் ஜனாதிபதி பதவி விலக்கப்பட முடியாதது. நாடாளுமன்றத்துடன் மற்றைய இரு அங்கங்களில் ஏதாவது ஒன்று இணைந்துதான் பதவி விலக்கலாம்.

ஆதலினால் பெயரளவில் பதவி நீக்கம் செய்ய இடமிருப்பது போலத் தெரிந்தாலும், உண்மையில் ஜனாதிபதிப் பதவியை உறுதிப்படுத்துவதற்கேற்ற ஏற்பாடுகளே இவையாகும்.

தமிழீழத்திலிருந்து
மு.திருநாவுக்கரசு

இத்தனை பாதுகாப்பு அம்சங்களும் போதாதென்று நடைமுறையில் இன்னோர் அம்சமும் இதற்கு அரணாக அமைந்திருப்பதைக் காணலாம். திரு. ஆர். பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்தபோது, அவரிற்கு எதிரான குற்றப் பத்திரம் ஒன்றில் நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினரில் அரைவாசிப்பேரிற்கு மேல் கையொப்பமிட்டு சபாநாயகரிடம் சமர்ப்பித்திருந்தனர். அதற்கு சபாநாயகரின் சம்மதமும் உண்டு என்ற நிலை தெரியவந்ததும், சபாநாயகர் மிரட்டலுக்கு உள்ளாகவே, அவர் அதனை நிகழ்ச்சிநிரலில் சேர்க்காது தவிர்த்தார். எனவே ஜனாதிபதிக்கு அரசியல் அமைப்புரீதியான பாதுகாப்பிற்கு அப்பால், மிரட்டல் முறையான இன்னொரு பாதுகாப்பும் சிங்கள அரசியலில் ஒரு பாரம்பரிய மரபாகிவிட்டது.

வெறும் சட்டநுணுக்கச் சிக்கல்களுக்கப்பால் நடைமுறை அர்த்தத்தில் பின்வரும் சிக்கல்களை ஆராய்வோம். ஜனாதிபதியைப் பதவி நீக்குதல் சம்பந்தமான விவகாரத்தில் நாடாளுமன்றத்தின் தீர்மானத்தை நீதிமன்றம் மீறமுடியும். அதேபோல நீதிமன்றத்தின் தீர்மானத்தை நாடாளுமன்றம் மீறமுடியும். இதில் ஜனாதிபதி குற்றத்திற்கு உரியவர்தான் என நீதிமன்றம் அறிக்கை எனப்படும் தனது தீர்ப்பை அளித்தபின்பு, நாடாளுமன்றம் அதனை நிராகரிக்கும் உரிமை உடையது. உயர் நீதிமன்றத்தின் விசாரணையை நாட்டின் முதல் பிரசை எனப்படும் ஜனாதிபதியின் பொருட்டு மீறமுடியுமெனில், நீதித்துறையின் கெளரவம் என்னவாகும்? இந்த நீதித்துறையின் தீர்ப்பிற்கு சாதாரண பிரசைகள் எவ்வாறு மதிப்பளிக்க முடியும்? இதில் நீதித் துறையின் கெளரவம் பாதிக்கப்படும் விதத்தினைப் பற்றி கலாநிதி என். எம். பெரேரா தனது நூலில் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசியல் யாப்பின் நான்காவது சரத்தின் பிரகாரம், மக்களின் இறைமையைப் பிரயோகிக்கக் கூடிய அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு உண்டு. ஆனால் அப்படியான அதிகாரம் நீதிமன்றத்திற்கு இல்லை. அப்படி இருக்கையில் நாடாளுமன்றத்தின் விருப்பத்தை நீதித்துறை மேற்படி பதவி விலக்கற் சிக்கல்களில் மீறமுடியும் என்றால், நாடாளுமன்றத்தின் இறைமை என்னாவது? இது நாடாளுமன்றத்தையும் இறைமையையும் கேலிக்கூத்தாக்கும் விவகாரமே!

ஜனாதிபதியினை பதவி நீக்கம் செய்வதற்கான முயற்சியில் நீதித்துறை அதனை நிராகரிக்குமாயின் அது தீர்ப்பாகிவிடும் சட்டத்துறை நிராகரிக்கும். ஆயினும் அதுவும் தீர்ப்பாகிவிடும். ஆனால் சட்டத்துறை ஏற்று நீதித்துறை நிராகரித்தாலும் அது தீர்ப்பாகமாட்டாது. நீதித்துறை ஏற்று சட்டத்துறை நிராகரித்தாலும் அது தீர்ப்பாக முடியாது. அதாவது நிராகரிப்பு விடயத்தை ஜனாதிபதிக்குச் சாதகமாக இரு துறைகளிலும் ஏற்பாடு செய்ததனாலேதான் மேற்படி இருதுறைகளுக்கிடையிலும் முரண்பாடும், கெளரவச் சிக்கலும் ஏற்பட்டு, இறைமையும், நாடாளுமன்றமும், நீதித்துறையும் ஒரே நேரத்தில் கேலிக்கூத்தாக்கப்பட்டன.

### சென்ற இதழ் தொடர்ச்சி

எனவே ஜனாதிபதி நலனை மையமாகக் கொண்டே தர்க்கபூர்வமற்றதும், ஒன்றுடன் ஒன்று பொருந்தாததுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனலாம்.

ஜனாதிபதியை நிகரற்ற அதிகாரமுள்ளவராக உருவாக்குவது, அவ்வாறான நிகரற்ற அதிகாரங்களை அவரது கைகளில் ஒப்படைத்துவிட்டு அவரையும் அவரது அதிகாரங்களையும் பாதுகாப்பது, அதற்காக முன்னுக்குள்ள ஒரு சரத்தை பின்னுக்குள்ள ஒரு சரத்தால் மீறுவது, இவற்றிற்காக முரண்பாடான விடயங்களை இணைக்கும் முயற்சியில் சாதாரண தர்க்கத்தையே மீறுவது போன்ற அனைத்துக் குளறுபடிகளுடனும் கூடிய வகையிலேயே, இந்த யாப்பின் பல்வேறு அம்சங்களும் பின்னிப் பிணையப்பட்டுள்ளன.

அரசியல் அமைப்பின் 155 ஆவது சரத்து பொதுமக்கள் பாதுகாப்புப் பற்றியதாகும். இது பொதுமக்களைப் பாதுகாக்கும் சரத்தல்ல; ஜனாதிபதியைப் பாதுகாக்கும் சரத்தாகும். இதனைப் பொதுமக்கள் உரிமைமீறல் சரத்து எனவும் அழைக்கலாம். பொதுமக்களின் பல்வகை உரிமைகளைப் பற்றியும் பலசரத்துக்கள் சிறப்பாக எழுதப்பட்டுள்ளன. ஆனால் பெரிதாக உரைக்கப்பட்ட அத்தனை உரிமைகளும், இந்தப் பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தை ஜனாதிபதி பிரகடனப்படுத்துவதன்மூலம் 'கண்மூடிமுழிக்க முன்னே' பறிக்கப்பட்டுவிடுகின்றன; மீறப்பட்டுவிடுகின்றன.

தேவையான கட்டங்களில் அரசியல் அமைப்பை மீறுவதற்கு ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள சட்ட அங்கீகாரத்திற்குப் பெயர்தான், 'பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம்' என்பது. இந்தச் சட்டத்தினை 17 ஆண்டுகளும் பதவி வகித்த மூன்று ஜனாதிபதிகளும் தமது தேவைக்கேற்ப பெருமளவு பிரயோகித்தனர். அப்படியாயின், இந்த அரசியல் அமைப்புப்பற்றிக் கூறக்கூடிய கருத்து என்னவெனில், **"இது அரசியல் அமைப்பற்ற அரசியல் அமைப்பு" என்பதே.** ■

**(தொடரும்...)**

# இன்று விழுந்....

இலக்குக்கு மிக அண்மையிலுள்ள ஒரு தரைப் பகுதி. லெப். கேணல் நளாயினி, மேஜர் மங்கை, கப்டன் லக்ஸ்மன், கப்டன் வாமன் உட்பட கடற் புலிகளின் பெண் -ஆண் போராளிகளைக் கொண்ட ஒரு அணி தயார் நிலையில் நின்றது. அங்கு நிற்கும் வரை சமையல் முறை ஒரு நாள் ஆண் போராளிகளுக்கும், மறுநாள் பெண் போராளிகளுக்கும் என மாறி மாறி வரும். பெண் போராளிகளின் சமையல் முறை என்றால் நளாயினிதான் 'மெயின்குக்'. சுவையாகச் சமைப்பவர்களுக்கு கன்டோஸ் வாங்கித் தருவதாக சூசையண்ணை சொல்லியிருந்ததால் போட்டியாகத்தான் சமையல் நடக்கும். சாப்பாட்டு நேரத்தில் வழக்கம்போல நளாயினி பெண் போராளிகள் எல்லாரையும் தன்னைச் சுற்றிவர இருத்தி, சோறு குழைத்துக் கொடுத்து...

தன் படகு மோதி சாகரவர்த்தனா நீருள் மூழ்கத் தொடங்கியதும் எல்லோரும் சாப்பிட என்று இனிப்புகள் வாங்கிக் கொடுத்து...

19. 09. 1994 அன்று நள்ளிரவில், தயாரிக்கப்பட்ட திட்டத்தில் எந்தப் பிசகுமே இல்லாமல், செய்து பார்த்த பயிற்சிகளில் எந்தத் தவறுமே நேராமல் நளாயினியும் மங்கையும், இவர்களைத் தொடர்ந்து வாமனும் லக்ஸ்மனும் மோதியதில் சாகரவர்த்தனா மூழ்கத் தொடங்கியது.

* * *

**நளாயினியையும் இன்னும் எண்ணற்ற வீரர்களையும் தன்னுடனணைத்துக்கொண்ட கடலன்னையின் அலைக் கரங்களிலே நீந்தி விளையாடி, படகோட்டி பயிற்சிகள் செய்யும் அந்த வேகமான வீராங்கனைகள் யார்? தெரியவில்லையே?**
**இன்னும் கொஞ்சம் கிட்டப் போய்ப் பார்ப்போமே!**

**அட, நளாயினி படையணி! ■**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இங்கு சந்திரிகாவின் ஆட்சி இல்லை எங்கள் ஆட்சியே நடக்கிறது

தாண்டிக்குளத்தில் பயணிகள் மீது படையினர் பாய்ச்சல்

வவுனியா தாண்டிக்குளம் சிறீலங்காப் படையினரின் சோதனை முகாம் ஊடாக, மின் கலங்களை (பற்றரி) எடுத்துவந்த அப்பாவித் தமிழ்ப் பயணிகள் மீது, படையினர் கொடூரத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

வழமைபோல் வவுனியா நகர்ப் பகுதியிலிருந்து வந்த பயணிகளை நிறுத்திவைத்த படையினர், மின்கலங்களை எடுத்துவந்தவர்கள்மீது தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று வந்த பயணிகளை நீண்டநேரம் தடுத்துவைத்து, சிங்களமொழியில் திட்டித்தீர்த்தபடி, அட்டூழியத்தில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

ஏதும் அறியாத பயணிகள் அச்சத்தாலும், தாக்குதலின் வேதனையாலும் சோர்ந்துபோய், மின் கலங்களை பறிகொடுத்துவிட்டு, வடபகுதி நோக்கிச் சென்றனர்.

"இங்கு பிரபாகரனின் ஆட்சியும் இல்லை; சந்திரிகாவின் ஆட்சியும் இல்லை; எங்கள் ஆட்சிதான் நடக்கிறது" என, தாக்கப்பட்ட பயணிகளிடம் படையினர் கூறி, சத்தமிட்டனர் என பயணிகள் தெரிவித்தனர். ■

# கரையோரப் படகுகள் மீது சிறீலங்காவின் தாக்குதல் முறியடிப்பு

மன்னார் மாவட்ட கரையோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த படகுகள் மீது திடீரென சிறீலங்கா விமானப்படையும், கடற்படையும் இணைந்து தாக்குதல் நடாத்தினர். இதனை அவதானித்த தமிழீழ விடுதலைப் புலிகள் பாதுகாப்புத் தாக்குதலை ஆரம்பித்தனர். விமானக்குண்டு வீச்சுக்களுடனும், உலங்குவானூர்திகளின் துப்பாக்கி பிரயோகத்துடனும் ஆரம்பமான தாக்குதல் விடுதலைப்புலிகளினால் முறியடிக்கப்பட்டது. சிறீலங்கா கடற்படையின் படகு ஒன்று சிறுசேதத்திற்கு உள்ளானதாகவும் இரண்டு சிறீலங்கா கடற்படையினர் படுகாயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கு முதல்நாள் விடுதலைப் புலிகளுக்கும், வங்காலையில் அமைந்துள்ள சிறீலங்கா இராணுவ முன்னரங்க காவலரண் இராணுவத்தினருக்கும் இடையே ஏற்பட்ட மோதல் ஒன்றில் மூன்று சிறீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், ஆயுதங்கள் சில விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்டதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

# திருகோணமலையில் வீடெரிப்பு சிறீலங்கா பொலிசாரின் இனஅழிப்பு முயற்சி

திருகோணமலை புல்மோட்டையில் பொதுமக்களின் நாலு வீடுகள் சிறீலங்கா பொலிசாரினால் முற்றாக தீவைத்து கொளுத்தப்பட்டன. புல்மோட்டையில் தேடுதல் நடவடிக்கை என்ற பெயரில் இவ் இனஅழிப்பு நடவடிக்கையில் இறங்கிய சிறீலங்கா பொலிசார் பொதுமக்களின் சொத்துக்களை கொள்ளையடித்தும் சென்றுள்ளனர். சிறீலங்கா பாதுகாப்புப் படைகளின் நேரடியான இவ் இன அழிப்பு நடவடிக்கைகள் திருகோணமலை வாழ் தமிழர்கள் மத்தியில் பலத்த அதிருப்தியை சிறீலங்காவின் புதிய அரசாங்கத்திற்கு எதிராக தூண்டியுள்ளது. ■

# விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்ய சுவிஸ் பாராளுமன்றம் மறுப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை சுவிற்சர்லாந்தில் தடைசெய்யவேண்டுமென, இரண்டு சுவிஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கோரிக்கையை, சுவிஸ் அரசு நிராகரித்துள்ளது. சுவிஸ் வாழும் தமிழீழ மக்கள் தமது நாட்டில் நடைபெறும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக, நிதிசேகரிப்பது குறித்து, பல ஆண்டு காலமாக சுவிஸ் அரசிற்கும், காவல் திணைக்களத்திற்கும் தெரியும்; ஆயினும் யாரும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டால் மட்டுமே, இவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கலாம் எனக்கூறி, சுவிஸ் அரசு தடைசெய்யும் கோரிக்கையை நிராகரித்துள்ளது. ■

# கடற் கரும்புலிகளின் துணிகரத்தாக்குதல் கடற் கரும்புலி மேஜர் வித்தி வீரச்சாவு வெற்றிலைக்கேணி கடற்கரையில் நடந்த சம்பவம்

வெற்றிலைக்கேணி கடற் கரையோரத்தில் கடற் கரும்புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலில், சிறீலங்கா கடற்படைக்குச் சொந்தமான 'படைகள் தரையிறக்கும் போர்க் கப்பல்' (Landing Craft) ஒன்று பாரிய சேதத்திற்கு உள்ளாகியது. நவம்பர் மாதம் 8 ஆம் நாள் அதிகாலை மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலை கடற்கரும்புலி மேஜர் வித்தி (சந்தணம் யோகேஸ்வரன், குடாரப்பு, நாகர்கோவில்) வெடி பொருட்கள் ஏற்றிய படகில் சென்று கப்பலின் மீது படகினை மோதி வெடிக்கச் செய்து வீரச்சாவடைந்தார். இதனால் சிறீலங்கா கடற்படையினருக்கும் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.



கடற்கரும்புலி மேஜர் வித்தி

வெற்றிலைக் கேணியில்
'அற்புதம்' நடந்தது
'வித்தி' யென்றோர் புலி
வெற்றியைக் குவித்தது
கடற்கரும்புலி யொரு
கப்பலைத் தகர்த்தது
கண்ணெதிரே பெரும்
கனலென மூண்டது
இனிவரும் நாளிலும் இனும்
வெடி அதிர்ந்திடும்
இவன் நினைவோடொரு
கொடி யெழுந்தாடிடும்.

நவம்பர் 8 ஆம் நாள் அதிகாலை 12.26 மணிக்கு கடற்கரும்புலிகளால் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வெற்றிலைக்கேணி இராணுவ முகாமிற்கு ஆயுத தளபாடங்களை கரையோரத்தில் வைத்து இறக்கிக் கொண்டிருக்கும்போதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள இத்தரையிறங்கும் பகுதிக்குள் வெற்றிகரமாக ஊடுருவி முன்னேறிய கரும்புலி இவ் வெற்றிகரமான தாக்குதலை நடத்தியுள்ளார்.

இக்கப்பலானது கரையில் பொருட்களை இறக்கிக் கொண்டிருந்தவேளை தாக்கப்பட்டமையினால் கப்பல் பலத்த சேதத்திற்கு உள்ளாகிய போதும், முற்றாக நீரினுள் அமிழும் சாத்தியம் குறைவாகவே இருந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாலை இடம்பெற்ற கரும்புலித்தாக்குதலின் போது, சிறீலங்கா கடற்படை மற்றும் இராணுவ தரப்பில் பலத்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. இருப்பினும் இது குறித்த தெளிவான தகவல்கள் வெளிவரவில்லை.

அதேவேளை, வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் தரையிறக்கும் போர்க் கப்பலுக்குக் காவல் காத்து நின்ற 'டோறா' படகுகள் மீது, விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர். கடற்புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத 'டோறா' படகுகள் விரைந்தோடியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. வெற்றிலைக்கேணி படையினருக்கான தளபாடங்களை இறக்கிக் கொண்டிருந்த போர்க்கப்பல் மீது கடற்கரும்புலிகள் வெற்றிகரமான தாக்குதலை மேற்கொண்டதை அடுத்து, இம்மோதல் ஆரம்பித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்பரப்பில் காவல் நின்ற 'டோறா' படகுகளுக்கும் கடற்புலிகள் அணியினருக்கும் இடையே கடும் மோதல் இடம்பெற்றது. இறுதியில் கடற்புலிகளால் டோறாப் படகுகள் விரட்டியடிக்கப்பட்டதாக அச்செய்தி மேலும் தெரிவித்துள்ளது. ■

# 4 முஸ்லீம் ஊர்காவற் படையினர் விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்டனர்

வில்பத்துவ காட்டுப்பகுதியில் வைத்து தமிழீழ விடுதலைப்புலிகளினால் நாலரை மாதங்களுக்கு முன் கைதுசெய்யப்பட்ட மொகமட் கனிபா மொகமட் நசீபு (வயது 16), எம். எஸ். பௌமி (வயது 20), எம். எச். ஏ. ஐபார் (வயது 26), எம். எச். முத்தாயீர் (வயது 27) ஆகிய நான்கு ஊர் காவல் படையினரும் கார்த்திகை இருபத்தைந்தாம் நாளன்று விடுதலை செய்யப்பட்டனர். விடத்தல் தீவு உதவி அரசாங்க அதிபரிடம் இவர்களை ஒப்படைத்த விடுதலைப் புலிகள் இவர்களது செலவுக்கென தலா 500 ரூபாவையும் கொடுத்துச் சென்றனர். இதன் பின்னர் விடுதலையான முஸ்லீம்கள் பின்வருமாறு செய்தியாளர்களுக்கு செவ்வி அளித்தனர்.

"நாங்கள் கைது செய்யப்பட்ட போது பயத்தால் நடுங்கினோம். உங்களை நாங்கள் துன்புறுத்த மாட்டோம் என விடுதலைப்புலிப் போராளிகள் எமக்கு ஆறுதல் கூறினர். நாம் காவலில் இருந்த நாலரை மாதங்களும் நல்ல உணவு தந்து வாசிப்பதற்கான செய்தித்தாள்கள், இதழ்கள் கொடுத்து எமது சுகாதார தேவைகளுக்கான சவர்க்காரம், முகச்சவரம் எடுக்கும் பிளேட் எல்லாம் தந்து எம்மை பராமரித்தனர். இரவில் நுளம்புத் தொல்லை என்றால் எரிப்பதற்கு 'நுளம்புச் சுருள்கள்' கூட தந்தனர். நாம் நோய்வாய்ப்பட்ட நேரங்களில் அதற்குரிய மருந்துகள் தந்தனர். தினமும் காலைக் கடன்களை கழிப்பதற்கும், உடுப்பு தோய்த்தல், குளித்தல் என்பவற்றுக்கும் காவலுடன் வெளியே சென்று வர அனுமதித்திருந்தனர். எங்களை விடுவித்த பொழுது தலா 500 ரூபா தந்ததும் அல்லாமல் எம்மை விடத்தல் தீவு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் வரை தமது வாகனத்தில் கொண்டு வந்து விட்டனர். "நாங்கள் முஸ்லீம்களுக்கு எதிரிகள் அல்ல. இதை மற்றவர்களுக்கு தெரிவியுங்கள்" என அவர்கள் எம்மைக் கேட்டுக் கொண்டனர். ■

# சமாதான முயற்சிக்கான நடைமுறைத் தடைகள்

- ✶ சிறீலங்கா பாதுகாப்புச் செலவீனத்தை 200 கோடியால் அதிகரிக்கின்றது
- ✶ இந்தியா தமிழீழ விடுதலைப் புலிகள் மீது களங்கம் கற்பிக்கும் முயற்சி
- ✶ தமிழ்க் குழுக்களின் குழப்பச்செயல்கள்

சிறீலங்கா அரசு, அடுத்த ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவீனத்தை, மேலும் 200 கோடியால் அதிகரித்துள்ளது. படையினரைப் பலப்படுத்தி, பூரணதயார்நிலையில் வைத்துக்கொண்டே, புதிய அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவிரும்புவதாகவும் விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் சிறீலங்கா அரசின் தீர்வுத் திட்டத்தை நிராகரித்தால், தீர்வுத் திணிப்புக்கும் பெரிய அளவிலான படை நடவ்டிக்கையை மீண்டும் தொடங்கவும் இது உதவுமென சிறிலங்கா அரசின் ஆலோசகர்கள் கருதுவதாகத் தெரியவருகின்றது.

இது ஒருபுறமிருக்க, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஆர். எல். பாத்தியா, இந்தியப் பாராளுமன்றத்தில், "ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக முதன்மைச் சந்தேகநபரான தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்தியாவிற்குக் கொண்டுவருவதற்கான அனைத்துச் சாத்தியக்கூறுகள் குறித்தும் பரிசீலித்து வருகின்றோம். இது விடயமாக சிறீலங்கா அரசை அணுகுவது குறித்தும் பரிசீலிக்கின்றோம்" எனக் கூறியுள்ளமை இந்தியா மீண்டும் சமாதான முயற்சியைக் குழப்புவதற்கான நடவடிக்கைகளைத் தூண்டி வருவதன் வெளிப்பாடென அவதானிகள் கருதுகின்றனர். சர்வதேச சமூகத்தினர் மத்தியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தலைவர் பிரபாகரனுக்கும் களங்கம் கற்பிக்கும் புதிய முயற்சியாகவே ஆர். எல். பாத்தியாவின் இக்கூற்றினை சர்வதேச அவதானிகள் கருதுகின்றனர்.

மேலும் கொழும்பில் தமிழ்க் குழுக்கள் சந்திரிகா அரசின் சமாதான முன்னெடுப்புக்களை குழப்பும் முயற்சிகளை வேகப்படுத்தி வருகின்றனர். விடுதலைப்புலிகள் மீது சந்தேகம் கொள்ளக்கூடிய வகையில் கருத்துக்களைத் தெரிவித்து சர்வதேச பத்திரிகையாளர்களுக்கு இவர்கள் கொடுக்கும் செய்திகள் சமாதான முயற்சிகள் பின்னடைவதையும் தடைப்படுவதையும் ஊக்கப்படுத்தி வருகின்றன.

அதேவேளை, சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவும் இக்குழுக்களுடன் கலந்துரையாடல்களை நடாத்தியுள்ளமை, சமாதானத்தை விரும்பும் மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. ■

# மாதிரி வீடமைப்புத் திட்டம் திறந்து வைப்பு

தீவக மக்கள் தங்கியுள்ள கெற்பலி பண்டிதர் குடியிருப்பில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் அமைக்கப்பட்ட மாதிரி வீடமைப்புத் திட்டம் -1 இன் திறப்பு விழா அண்மையில் வெகு விமரிசையாக நடாத்தப்பட்டது. தமிழர் புனர்வாழ்வுக் கழகச் செயலாளர் திரு. க. இலங்கேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மங்கள விளக்கினை குடியிருப்புப் பொறுப்பாளர் திரு. அற்புதன் ஏற்றிவைத்தார். தேசியக்கொடியை யாழ். மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து வீடமைப்புத் திட்டப் பெயர்ப்பலகையை குடியிருப்புப் பாடசாலை அதிபர் திரு. செ. சண்முகவடிவேல் திரைநீக்கம் செய்துவைக்க, விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன் அவர்கள் வைபவரீதியாக வீடமைப்புத் திட்டத்தைத் திறந்துவைத்தார்.

இதையடுத்து இங்கு புதிதாக அமைக்கப்பட்ட வீரவேங்கை

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடலன்னையின் குழந்தை

உயர, உயர அலைகளை வீசியெறியும் கடலுடன் நெருங்கிய, நேசமான உறவை வைத்திருக்கும் அந்தக் கடற்கரை, ஒரே வெண்மணல் பிரதேசம்.

சாதாரணமாக எந்த ஒரு இளம் பெண்ணுக்கும் இந்த வெண்மணற்பரப்பைப் பார்த்தால், தோழியருடன் ஓடிப்பிடித்து விளையாடத்தோன்றும்.

கால்களைப் புதையவைக்கும் அந்தக் கடற்கரை மணலிலே, உறுதியாகக் காலடிகளைப் பதித்தவாறு, கடற்பரப்பிலிருந்து தரையை நோக்கிவீசும் வேகமான காற்றை ஊடறுத்தவாறு, நீச்சல் பயிற்சியில் ஈடுபடுவதற்காக, கடற்புலிகள் மகளிர் படையணி கடலைநோக்கி நடந்துகொண்டிருந்தது. பெரும் மலையையே புரட்டிவிடுவதுபோன்ற வேகத்துடன் உயரக்கிளம்பி, 'வாருங்கள் வீராங்கனைகளே, வணக்கம்' என்று இவர்களை நோக்கி கூறிப்பணிவதுபோன்று, அலைகள் கீழேவிழும். எத்தனை தரமும் மேலே, மேலே எழுந்து விழுவதில், அந்த அலைகளுக்கு சலிப்பதில்லை. அந்த அலை நடுவே நீந்திச் செல்வதில் பெண்புலிகளும் சளைப்பதில்லை.

திடீரென கடலின் மேற்பரப்பில் ஏதோ ஒரு பரபரப்பு. மீனவர்களின் படகுகள் வேகவேகமாகக் கரையை நோக்கித் திருப்பப்பட்டன. சிலர் படகுகளை, வலைகளை விட்டுவிட்டு, நீரில் குதித்து, நீந்த முயல்வது தெரிந்தது. மேற்கடலிலே எதிரியின் டோரா படகுகள் துரத்துகின்றனபோலும்; அப்படித்தான் இருக்கவேண்டும். கடற்புலிகளை எதிர்நோக்குவதைத் தவிர்த்துக்கொள்வதற்காக, இப்போதெல்லாம் எதிரியின் கடற்படகுகள் மேற்கடலிலேயே நின்று தாக்கிவிட்டு, ஓடுவதுதான் வழமையாகிவிட்டிருந்தது.

"நான் நல்லூரில திருவிழா நடக்கிற நேரந்தான் சாகவேணும்; அப்பதான் திருவிழாவில அம்மா கச்சான் வித்துவந்த காசு இருக்கும். அந்தக் காசு இருந்தாத்தான், என்ரை நினைவுநாளுக்கு வீட்டை போற பிள்ளைகளுக்கு (சக பெண் போராளிகளுக்கு) அம்மாவாலை சாப்பாடு குடுக்க ஏலும்".
- கப்டன் அங்கயற்கண்ணி.

படகுகளுடன் திரும்பியவர்களும் எல்லாவற்றையும் கடலிலே விட்டுவிட்டு, உயிரைமட்டும் காப்பாற்றி, நீந்தி வந்தவர்களும்போக, ஏனையோர்...?

அலை அடித்து, ஒவ்வொரு உடலையும் கரையில் கொண்டுவந்து தள்ளியது. மீனவக் குடும்பங்களின் கண்ணீர் அலை, கடலுடன் சேர்ந்துகொண்டிருந்தது.

நீச்சல் பயிற்சியில் ஈடுபடவென கரைக்கு வந்த பெண்புலிகளின் மனம், ஏழைகளின் கண்ணீரில் இளகியது. அனுதாபத்துடன், அந்த மக்களின் நிலையைப்பற்றித் தமக்குள் பேசிக்கொண்டார்கள்.

அங்கயற்கண்ணியின் மனம் இறுகிப் பாறையானது.

"இவங்களுக்கு இதுக்கு ஒரு சரியான பதிலடி குடுக்கவேணும்".

அந்த நிமிடத்திலேயே மனதளவில் அவள் ஒரு கரும்புலியானாள். சிறீலங்காக் கடற்படையின் கப்பல் ஒன்றைக் கரும்புலித் தாக்குதல் மூலம் அழிக்கவேண்டும் என்ற எண்ணம் அப்போதுதான் அவளுள் ஆழவேரோடியிருக்க வேண்டும்.

* * *

தொடர்ந்தும் எமது மக்கள் சிறீலங்காக் கடற்படையின் தாக்குதலுக்கு அஞ்சி, எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடிவருவதும், அன்று முழுவதும் (வருமானம் இல்லாததால்) ஒருவேளைக் கஞ்சிகூடக் குடிக்க வழியில்லாமல், பசியுடன் அழும் தம்குழந்தைகளை சமாதானம் பண்ணமுடியாமல், தமக்குள்ளேயே கண்ணீர்விடும் ஏழைத் தாய்களையும் ஏழைத் தந்தைகளையும் அடிக்கடி காணநேர்ந்தபோதெல்லாம், தான் எடுத்த முடிவில் மேலும் உறுதிபெற்றாள் அவள்.

தான் ஒரு கரும்புலியாகிப் போகவிரும்புவதைத் தலைவருக்குத் தெரியப்படுத்தினாள்.

* * *

சரியாக எட்டு மணித்தியாலமும் இருபத்தியேழு நிமிடங்களும் அங்கயற்கண்ணி பதினேழு கடல்மைல்களை (ஏறத்தாழ முப்பத்தைந்து கிலோ மீற்றர்கள்) நீந்திக் கடந்துவிட்டாள். பொறுப்பாளர்களுக்கு அவள்மேல் என்னவென்று சொல்லமுடியாத ஒரு பிரியம். கடற்கரும்புலிகளுக்குரிய பயிற்சியில் ஈடுபடத் தொடங்கிய நாளிலிருந்து, அவள் அந்தக் கடுமையான பயிற்சிகளில் மிகத்திறமையாக ஈடுபட்டமை, எல்லோருக்குமே திருப்தியைத்தந்தது. கொடுக்கப்படும் இலக்கை அவளால் சரியாகத் தாக்கமுடியும் என்பதில், யாருக்குமே ஐயம் இருக்கவில்லை.



தமிழீழத் தேசியத் தலைவருடன் கப்டன் அங்கயற்கண்ணி.

* * *

காங்கேசன்துறைத் துறைமுகத்தில் நாற்பத்தைந்து அடி ஆழங்கொண்ட நீர்ப்பரப்பில் நிலைகொண்டிருந்த, வடபகுதித் தலைமையகக் கப்பலை யாராலுமே தாக்கமுடியாது என்பதில், எந்தக் கடற்படை அதிகாரிக்குமே ஐயம் இருக்கவில்லை.

**ஆறாயிரத்து முந்நூறு தொன் எடையைக் கொள்ளக்கூடியதும், 326. 04 அடி நீளமும் 51. 02 அடி அகலமும் கொண்டதும், அதிசக்தி வாய்ந்த ராடர்கள் பொருத்தப்பட்டதுமான நீரில் மிதக்கும், நடமாடும் தலைமையகக் கடற்படைக் கப்பலை ஒரு தனிமனிதனால் அழிக்கமுடியும் என்று, அவர்கள் கனவில்கூட நினைத்திருக்கவில்லை என்பது முழுமையான உண்மை.**

* * *

கடற்புலிகள் மகளிர் படையணியின் மூன்றாவது பயிற்சிப் பாசறையில் பயிற்சி எடுத்த அங்கயற்கண்ணியிடம், இயல்பாகவே ஆளுமைத்தன்மை இருந்தது. தொடக்கத்திலிருந்து அவள் குழுத் தலைவியாகவே இருந்துவந்தாள். கடற்புலிகளின் பெண் -ஆண் போராளிகளிடையே நடாத்தப்பட்ட போட்டி ஒன்றில் முதலாவதாக வந்தாள்; விளையாட்டிலே கெட்டிக்காரியாக இருந்தாள்.

ஆனால் வீட்டிலிருக்கும்வரை இதற்கு நேர்மாறான இயல்பைக்கொண்டிருந்தாள். இரவிலே தனியாக வெளியே போகமாட்டாள்; எதற்கும் அம்மாவின் துணைவேண்டும் அவளுக்கு. என்று, தான் ஒரு புலியாகவேண்டும் என்று எண்ணிப் புறப்பட்டாளோ, அன்று அவளுள் மறைந்திருந்த ஆளுமை வெளி வந்தது.

லெப். கேணல் பாமாவுக்கும் மேஜர் சுகன்யாவுக்கும் இவளை முழுமையாகத் தெரியும். அவர்கள் இருவருடனும்தான் அவள் நீண்டகாலம் நின்றிருக்கின்றாள். வரலாற்றுப் புகழ்மிக்க 'தவளை நடவடிக்கை'யின்போது இவள் லெப். கேணல் பாமாவின் குழுவில் ஒருத்தியாக கடற்கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தாள். அவளது நடவடிக்கைகள், பண்புகள், எந்தப் பொறுப்பையுமே அவளிடம் நம்பிக்கொடுக்கலாம் என்ற நம்பிக்கையை எல்லோரிடமும் ஏற்படுத்திவிட்டிருந்தன.

இயக்கத்தோடு இணைந்த பின்னர், ஒருமுறை இவள் விடுமுறையிலே வீடு சென்றிருந்தாள். தாயும் தந்தையும் சகோதரர்களும் காட்டிய பாசத்திலே நனைந்தவள்.

"நீங்களெல்லாரும் நல்லாப் படிக்கவேணும்; படிச்சு முன்னுக்கு வரவேணும்" என்றே தன் சகோதரர்களிடம் சொன்னாளாம்.

"நான் காத்தோடை காத்தாப் போயிடுவன், அம்மா" என்று தாயிடம் சொன்னாளாம்.

எதற்காகத் தன்மகள் அப்படிச் சொன்னாள் என்பதை, தன் மகளை இழந்த பின்னர்தான், அந்த அன்பான அம்மாவால் புரிந்துகொள்ளமுடிந்தது.

"பருந்திட்ட இருந்து தன்ர குஞ்சுகளைத் தாய்க்கோழி காக்கிற மாதிரி, வேலணையிலிருந்து நான் பத்திரமாகக் கூட்டிவந்த பிள்ளை". என்று சொல்லிச் சொல்லி அழுது களைத்துவிட்டாள் அம்மா. எப்படித் தன்மகளால் இப்படியொரு சாதனையைச் செய்யமுடிந்தது என்று தன்னிடமே கேட்டுக்கொள்கின்றாள் அவள். சொந்த வீடு வாசல், காணிகளை வேலணையில் சிறீலங்காப் படையினரிடம் இழந்து, ஏதிலியாக நிற்கும் அவளால், இரவிலே வெளியே போகும்போது மகளுக்குத் துணைபோன அவளால் தன்மகளின் வீரத்தை வியப்புடன்தான் பார்க்கமுடிந்தது.

* * *

கரும்புலித் தாக்குதலுக்கான பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது தன் தோழிகளிடம்,

"நான் நல்லூரில திருவிழா நடக்கிற நேரந்தான் சாகவேணும். அப்பதான் திருவிழாவில அம்மா கச்சான் வித்துவந்த காசு இருக்கும். அந்தக் காசு இருந்தாத்தான், என்ரை நினைவுநாளுக்கு வீட்டைபோற பிள்ளைகளுக்கு (சகபெண் போராளிகளுக்கு) அம்மாவாலை சாப்பாடு குடுக்க ஏலும்".

"என்னம்மா, ஏதாவது சொல்ல நினைக்கிறாயா?"
- லெப். கேணல் நளாயினி.
"உங்கட அன்பும், அண்ணையின்ரை (தலைவரின்) அன்பும் எப்பவும் எனக்கு இருக்கவேணும்".
- கப்டன் அங்கயற்கண்ணி.

என்று அடிக்கடி சொல்வாளாம். அவளின் தோழிகள் ஒவ்வொருவரின் மனதிலும் அங்கயற்கண்ணியின் இந்த வசனம், கல்லிலே செதுக்கியதுபோலத் தெளிவாகப் பதிவாகியிருக்கின்றது. எத்தனை தரம் கேட்டாலும், அவர்கள் திருப்பித்திருப்பிச் சொல்கின்றார்கள்.

எலலாம் தயார்.

கடற்புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி லெப். கேணல் நளாயினி அவர்கள், அங்கயற்கண்ணியிடம், "என்னம்மா, ஏதாவது சொல்ல நினைக்கிறாயா?" என்று கேட்டார்.

தயக்கமில்லாமல், மிகத்தெளிவாக அங்கயற்கண்ணியிடமிருந்து பதில் வந்தது.

"உங்கட அன்பும், அண்ணையின்ர (தலைவரின்) அன்பும் எப்பவும் எனக்கு இருக்கவேணும்".

**தாயை நேசிப்பதைவிட, அதற்கும் மேலாகத் தலைவரையும் தன்னை வளர்த்துவிட்ட பொறுப்பாளர்களையும் தாயகத்தையும் நேசிப்பவர்கள்தான் கரும்புலிகள்.**

அங்கயற்கண்ணியை கடற்கரைவரை சிலர் வழியனுப்ப, அதன் பின்னரும் விடாது சில போராளிகள் அவளுடனேயே நீந்தி, ஒரு குறிப்பிட்ட தூரம் வரை வழியனுப்ப, அதன் பின்னரும் இலக்கிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொலைவுவரை வந்து, பிரியாவிடை கொடுத்தனர் சகபோராளிகள்.

"இலக்கை அடிக்காம நான் திரும்பமாட்டேன்".

என்று சொல்லிவிட்டு, அங்கயற்கண்ணி விடைபெற்றாள். தூரத்தே அவளது அசைவுகள் தெரியும் தூரம்வரை, அதன் பின்னரும் கண்கள் வலிக்க, வலிக்க வெறும் அலைகளை உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்துவிட்டு, ஏனையவர்கள் திரும்பினார்கள்.

16. 08. 1994 அதிகாலை 12. 35 மணியளவில், காத்துக்கொண்டிருந்த போராளிகளின் செவியில் பெரும் அதிர்வு. எத்தனையோ மைல்களுக்கு அப்பால் உறங்கிக்கொண்டிருந்த மக்களின் செவிகளிலேகூட அந்த ஓசை கேட்டதென்றால், காங்கேசன்துறையில் நின்றிருந்த படையினரைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? எல்லோருக்குமே பரபரப்பு.

தமது கனவுக் கோட்டைகளில் ஒன்று தகர்ந்ததால், சிறீலங்காப் படைத்தலைமை பரபரப்படைந்தது.

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...

**எல்லையை எதிரி தொடுகின்றபோதினில்
எரிமலையாகி நின்றார் - இவர்
அலையெனப் பகை எழுந்திட்டபோதும்
அஞ்சுதல் மாட்டோம் என்றார் - வீரர்
அன்னை நிலமிது அடிமைப்படவோ?
என்றே ஆவி தந்தார்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோர்வேயில் மாவீரர் நாள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் நோர்வே கிளையினரால், இவ்வாண்டும் ஒழுங்கு செய்யப்பட்ட மாவீரர் நாள் அஞ்சலி கலை நிகழ்வுகள், நோர்வேயின் முக்கிய ஏழு நகரங்களில் சிறப்பாக உணர்வு பூர்வமாக நடந்தேறியது. இந்நிகழ்வுகளில் ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட தமிழீழ மக்கள் கலந்துகொண்டனர்.

HAMMERFEST என்னும் நகரத்தில் நடந்த அஞ்சலி நிகழ்வில், 'ஈழத்திலிருந்து மகுடியார்' என்ற நாடகம், பட்டிமன்றம், குறும்படம் என்பன இடம்பெற்றன. TRONDHEIM எனும் இடத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்ச்சிகளில் மாவீரர் புகழ் பாடும் நடனங்களும், எழுச்சிக் கீதங்களும், 'மண்ணில் ஒரு பிடி' என்ற நாடகம், குறும்படம் ஆகியவையும் மக்களின் விடுதலை உணர்வை தூண்டும் வண்ணம் அமைந்தன. STAVANGER இல் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வுகளில் அபிநயம், கிராமிய நடனம், இசையும் கதையும், நாடகம் என்பன பார்வையாளரைப் பெரிதும் ஈர்த்தன. VARDO, FLORO என்ற நகரங்களிலும் மாவீரரை நினைவு கூரும் நிகழ்ச்சிகள் உணர்வு பூர்வமாக இடம் பெற்றன.

BERGEN இல் இம்முறை மாவீரர் வாரமாக பல்வேறு நிகழ்ச்சிகளுடன் நினைவு கூறப்பட்டது. சிறுவர்களுக்கு சித்திர, பேச்சு, உறுப்பெழுத்து, போட்டிகளும், நோர்வே தழுவிய ரீதியில் கட்டுரைப் போட்டியொன்றும் நடாத்தப்பட்டது. சிறப்பு வானொலி ஒலிபரப்பும், 'மண்ணுக்காக' திரைப்படமும் இம் மாவீரர் வாரத்தில் இடம்பெற்றது. இறுதிநாள் நிகழ்ச்சிகளுக்கு தமிழீழத்திலிருந்து வருகை தந்த அருட்தந்தை நேசநாயகம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கினார். 'தளபதி கிட்டு -ஒரு காலத்தின் பதிவு' எனும் நூல் வெளியீடும் இடம்பெற்றது.

## ஒஸ்லோவில்

ஒஸ்லோவில் சரியாக 6.00 மணிக்கு திரைவிலக நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. முதலில் ஈழ விடுதலைப் போரிலே தம் இன்னுயிர்களை அர்ப்பணித்து விட்ட போராளிகளுக்கும், பொதுமக்களுக்கும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன் தொடராகவே 'மாவீரர் விருத்தம்' இசைக்கப்பட்டது. பாடகர்களின் கணீரென்ற குரல்வளமும் மென்மையான நகர்வும் பார்வையாளர்களை உறுதியோடு, உணர்வோடு நிகழ்வுகளுக்குள் அழைத்துச் செல்ல உதவியது.

அதனைத் தொடர்ந்து அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. மேடையருகே மாவீரர் சமாதி போன்று அமைக்கப்பட்டிருந்த பீடத்திற்கு அனைத்து மக்களும் வரிசையாக எழுந்து வந்து மாவீரர் சுடரை ஏற்றினார்கள். அதே சமயம் மேடையில் அகன்ற வெண்திரையில் எம் விடுதலைக்கு வித்தாய் வீழ்ந்து விட்ட வீரர்கள் பற்றிய ஓர் தொகுப்பு ஒளிபரப்பப்பட்டது. இந்த சுடரேற்றும் நிகழ்வைத் தொடர்ந்து, 'விடுதலை வித்து' எனும் நடன நிகழ்வு மேடையேற்றப்பட்டது. பார்வையாளர்களை ஈர்த்த இந்த நடன நிகழ்வில், பயிற்றுனர்களின் ஆளுமையையும், நடனமாடிய பெண்பிள்ளைகள் பாத்திரங்களோடு ஒன்றிய தன்மையையும் காணக் கூடியதாய் இருந்தது. பக்கவாத்தியமும், பாடல்களும் இதற்குமேலும் மெருகேற்றின. இதைத் தொடர்ந்து மாவீரர் நாள் சிறப்புரை இடம்பெற்றது.

அடுத்து மாவீரரின் நினைவுகளைக் இசை வடிவங்களாக கோர்த்த 'மாவீரர் நினைவுகள்' நிகழ்ச்சி இடம்பெற்றது. ஏற்கனவே தமிழீழத்தில் வெளிவந்த இசை நாடாக்களில் இருந்து தேர்ந்த ஆறு பாடல்கள் மேடையில் இசைக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து தாயகத்தின் புகழ் பாடிய 'தாய் நிலத்தை மறக்கலாமா' என்னும், கோலாட்ட வடிவிலமைந்த நடனமும் வித்தியாசமானதாய் அமைந்திருந்தது.

இடைவேளையைத் தொடர்ந்து, நோர்வேயில் தமிழில் முதற்தடவையாக 'மக்கள் அரங்கம்' (FORUM THEATRE) எனும் நாடக வடிவம் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. புலம்பெயர்ந்த சராசரியான ஓர் தமிழ்க் குடும்பம்; நம் சமூகத்தில் புரையோடிப் போயிருக்கும் சீதனப் பிரச்சினையை எதிர்கொள்வதும்; கதாபாத்திரங்களாக வரும் அண்ணனும், தங்கையும் இதனால் தம் கொள்கை உறுதியில் நெகிழ்வதும் என்று சுவாரஸ்யமாக நாடகம் நகர்ந்து ஒரு கட்டத்தில் நெறியாளரால் நிறுத்தப்பட்டது. அங்கு எழுந்த பிரச்சினைக்கு தீர்வினைக்கான பார்வையாளரிலிருந்து பலர் ஆர்வமாக முன்வந்தமை இது போன்ற தயாரிப்புகளிற்கு ஓர் ஆரோக்கியமான ஆரம்பமாயிருந்தது. இம் முதல் முயற்சிக்கு நம் சமூக அவலம் ஒன்றை கருப்பொருளாக்கியமை பார்வையாளரை நாடகத்தோடு ஒன்றித்துச் சிந்திக்கச்செய்தது.



ஒஸ்லோ மாவீரர்நாளில் "தாய் நிலத்தை மறக்கலாமா" என்ற நடனத்தில்

இறுதியில், ஈழத்துக் குறும்படமான 'காற்றுவெளி' அகன்ற திரையில் திரையிடப்பட்டது. உணர்வோடு, மாவீரரின் நினைவுகளை நெஞ்சில் நிறுத்திய இந்த மாவீரர் நாள் அஞ்சலி கலை நிகழ்வுகளில் 500 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். ■

# இத்தாலி - பலெர்மோவில் மாவீரர் வீரவணக்க விழா - 1994

இத்தாலியின் பலெர்மோவாழ் தமிழீழ மக்கள், விடுதலைப் புலிகளின் இத்தாலிக் கிளையினருடன் இணைந்து, தமிழீழத்திற்காக அனைத்தையும் துறந்த புனிதர்களின் பெருநாளாம், தமிழீழ தேசத்தின் எழுச்சி நாளான மாவீரர் நாளை 27.11.-1994 ஞாயிற்றுக்கிழமை மாலை ஆறுமணிக்குத் தொடங்கி நினைவுகூர்ந்தனர்.



இத்தாலி மாவீரர் நாளில் "காடுகளே காடுகளே" என்ற அபிநய நடனத்தில்

நிகழ்ச்சியன்று வழமைக்கு மாறாகப் பெய்த அடைமழையையும் பொருட்படுத்தாமல், எம் தேசச்சிற்பிகளை, அந்த அபூர்வ மனிதர்களை வணங்கப் பெருந்திரளாக எம்மக்களும்; இத்தாலி தேசமக்களும் ஒன்று திரண்டனர்.

முதலில் மாவீரர்களை வணங்கி, அவர்கள் நினைவுச்சுடரை மாவீரன் கடற்கரும்புலி கப்டன் மணியரசனது சகோதரியும், சகோதரனும், மாவீரன் ராயு அவர்களுடைய தாயாரும் ஏற்றிவைக்க, மாவீரன் வீமன், மாவீரன் விக்னேஸ்வரன், மாவீரன் தமிழரசன், மாவீரன் குமரப்பா ஆகியோரது சகோதரர்களும், மாவீரன் லெப். சாம்ராஜ் அவர்களது சகோதரியும் மாவீரர் ஒளிச்சுடரை ஏற்றிவைத்தனர். இத்தாலிக்கிளையின் கலை, பண்பாட்டுக் கழகக் கலைஞர்கள் மாவீரர் வணக்க அஞ்சலிப் பாடல் பாடியதும், இருநிமிட அமைதிவணக்கத்தைத் தொடர்ந்து, நிகழ்ச்சித் தொகுப்பாளர் மாவீரர் வணக்கவுரை நிகழ்த்தினார். இதன்பின்பு கலை நிகழ்ச்சிகள் தொடங்கின.

தியாகி லெப். கேணல் திலீபன் கல்விநிலைய மாணவர்களும், தமிழீழ விடுதலைப் போரில் முதல் களப்பலியான பெண்புலி 2 ஆம் லெப். மாலதி ஞாபகார்த்த கலைப்பள்ளி மாணவிகளும் சேர்ந்து, உண்மை மனிதர்களுக்கு அஞ்சலி நடனமும், அவர்கள் சாதனையின் உயர்வைப் புகழ்பாடும் கும்மியும் ஆடினர். அதைத் தொடர்ந்து இத்தாலி கலை, பண்பாட்டுக் கழக இசைக்குழுவினர் வழங்கிய 'மாவீரர் அஞ்சலி கானங்கள்' இசை நிகழ்ச்சி இடம்பெற்றது. உலகின் எந்த அறிவாலும், ஞானத்தாலும் கணிக்க முடியாத அகஆற்றல் படைத்த, தேசத்தையே மூச்சாக்கி மக்களின் நல்வாழ்வை இலட்சியமாகக் கொண்ட, மனித எரிமலைகளான கரும்புலிகளுக்கும், கடலிலே காவியம் படைத்த பெண் கடற் கரும்புலிகளுக்கும் காணிக்கையாக நான்கு பாடல்களை இக்கலைஞர்களே எழுதி, இசைவழங்கி மேடையேற்றி மக்களை மாவீரரின் நினைவில் மூழ்கச் செய்தமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து 2 ஆம் லெப். மாலதி கலைப்பள்ளி ஆசிரியரும் -தமிழீழத்தில் நடன ஆசிரியையாக இருக்கும் செல்வி சுபாஜினி நடராஜா அவர்களின் மாணவி, தமிழீழத்தைச் சேர்ந்த நடனஆசிரியை திருமதி சாரதாதேவி சிறீஸ்கந்தராசா அவர்களின் மாணவி ஆகியோரும் கலைப்பள்ளி மாணவிகளும் இணைந்து "மாவீரரே... எங்கள் மாதவ வேங்கைகளே..." என்ற பாடலுக்கு அபிநயம் வழங்கினர்.

இவர்களைத் தொடர்ந்து இத்தாலியின் நாப்பொலி நகரின் பிரதேசப் பொறுப்பாளர் மாவீரர் சிறப்புரையாற்றினார். தியாகி திலீபன் கல்விநிலைய மாணவன் சிறுவர் உரை நிகழ்த்தினார். அடுத்ததாக மீண்டும் கலைப்பள்ளி மாணவிகளும், கல்விநிலைய மாணவர்களும் எம் தேசத்துக் கலைஞர்களால் தமிழீழ மண்ணில், அதன் போராட்ட வாழ்வை உயிர்ப்புடன் கலந்து உருவாக்கப்பட்ட பாடல்களுக்கு, வேங்கைகளின் வீரத்தையும், தற்கொடையையும் எம் தேசமக்களின் எழுச்சியையும், வெளிப்படுத்தக்கூடியவகையில், பார்த்த மக்களின் நெஞ்சை விட்டு அகலாதவண்ணம் பரத நாட்டிய அபிநயம் மூலம் அழகியல் தந்தனர். இவர்கள் "கரும் புலிகள் என நாங்கள்...", "காடுகளே, காடுகளே", "இரத்தத்திலே சிவந்தமண்..." "தெரு

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

# நெதர்லாந்தில் மாவீரர்நாள்

கடந்த கார்த்திகை மாதம் 27 ஆம் நாள், தென் நெதர்லாந்தில் அவுடன் போஸ் நகரில் மாவீரர் நாள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. எமது சுதந்திரமான வாழ்வுக்கு தம் இனிய, இளைய உயிர்களைத் தற்கொடை செய்த மாவீரர்களை நினைவுகூரும் முகமாகக் கொண்டாடப்பட்ட இவ் எழுச்சி விழாவில், நெதர்லாந்தில் தமிழர் தொகை ஒப்பிடுமிடத்து குறைவாக இருந்த போதிலும், அரங்கு நிறைந்து மிகப் பெருந்தொகையில் தமிழ் மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

நெதர்லாந்து தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளர் போ. அருமைநாயகம், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட யேர்மன் தமிழர் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கா. சிவநாதன் ஆகியோருடன் மாவீரர் குடும்ப அங்கத்தவர்களும் இணைந்து மாவீரர் தீபம் ஏற்றி வைக்க நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. வரவேற்புரை, சிறப்புரை ஆகியவற்றைத் தொடர்ந்து நெதர்லாந்து தமிழர் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. நெதர்லாந்தின் பல இடங்களையும் சேர்ந்த சிறுவர், சிறுமியர் பங்கேற்ற நடன நிகழ்ச்சிகள், பரத நாட்டியங்கள் பெரிதும் வரவேற்பைப் பெற்றன.

முதற் தடவையாக நெதர்லாந்து தமிழ் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து, தமிழீழ எழுச்சிப் பாடல் இசை நிகழ்ச்சியொன்றை மிகவும் நேர்த்தியாக வழங்கினர். தமிழீழ நாடகாசிரியர் இ. முருகையன் எழுதிய 'மண்ணில் ஒரு பிடி' நாடகம் நெதர்லாந்து தமிழர் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் நெறியாள்கை செய்யப்பட்டு மேடையேற்றப்பட்டபோது, அது பெரும் பாராட்டுதலைப் பெற்றது. 'விடியலைத் தேடி' என்ற நாட்டுக்கூத்துப் பாணி நாடகம் புதிய முறையில் நடாத்தப்பட்டு மக்கள் மத்தியில் பலத்த கைதட்டலைப் பெற்றது.



நெதர்லாந்து மாவீரர் நாளில் "மண்ணில் ஒருபிடி" என்ற நாடகத்தில்

நாதஸ்வரம், தவில் இணைந்த சோழக் கச்சேரியும் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக மாவீரர் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட கவிதை, சிறுகதைப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்ணுலகில் புதிய வரலாறு படைத்த எரித்திரியப் பெண்கள்

உலக உலா

**1993** மே 24.

உலக வரைபடத்தில் ஒரு புதிய நாடு, தன்பெயரை அழுத்தமாகப் பொறித்துக்கொண்டது.

ஒடுக்கப்பட்ட எரித்திரியர்கள் தமது விடுதலைக்காக முப்பது ஆண்டுகள் போராடியபின், அவர்களின் தாயகம் வென்றெடுக்கப்பட்டது. தாயக விடிவுக்காக ஆயுதமேந்திப் போராடிய, புரட்சிகர எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியினரில், பெண் போராளிகளின் பங்கு குறிப்பிடத்தக்கது. ஒரு காலத்தில் சமூகத்தின் மிகக்கடுமையான கட்டுக்குள் சிக்கிக்கிடந்த எரித்திரியப் பெண்கள், 'எரித்திரியப் பெண்களின் தேசிய சங்கமாக' உருவெடுத்ததையும் தாயக விடிவுக்கும் -தன்னின விடிவுக்குமாகப் போராடி அவர்கள் வென்றதையும் இக்கட்டுரை சுருக்கமாக விளக்க முனைகின்றது.

இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன், எரித்திரியப் பெண்களுக்கு நிலங்களைச் சொந்தமாக வைத்திருக்கும் உரிமையில்லை; ஆண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தின் அரைப்பங்கிற்கும் குறைவான தொகையே, பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது; வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பெருந்தோட்டங்களிலும் பண்ணைகளிலும் பெண்கள் மிகவும் இழிவாகச் சுரண்டப்பட்டார்கள்; குடும்ப, கிராமிய மட்டங்களில் எடுக்கப்படும் வரையறுக்கப்பட்ட தீர்மானங்கள், பெண்களுடன் கலந்தாலோசிக்கப்படாமலேயே எடுக்கப்பட்டன; கல்வி மறுக்கப்பட்டது; தன்னுடைய கணவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை எந்தப் பெண்ணுக்குமே இருக்கவில்லை.

இப்படி ஏராளமான அழுத்தங்கள் அவர்கள் மீது பிரயோகிக்கப்பட்டு இருந்தபோதிலும், குடியேற்ற நிலமானிய அமைப்புக்களுக்கு எதிராக எரித்திரிய மக்கள் நடத்திய போராட்டங்களிலிருந்து பெண்கள் ஒதுங்கியிருக்கவில்லை. வர்க்க ஒடுக்குமுறைகளை ஏற்று, எரித்திரியப் பெண்கள் வாளாதிருந்ததாகச் சம்பவங்களே இல்லை. 1950 ஆண்டுக் காலப்பகுதியில், பாடசாலைக்குச் செல்லும் வசதியை ஒரு சில பெண்கள் பெற்றிருந்தபோதும், வளர்ச்சியடையத் தொடங்கியிருந்த எரித்திரிய மாணவர் அமைப்பின் போராட்டங்களில் தீவிரமாகப் பங்கெடுத்தார்கள். பல ஊர்வலங்களில் பங்குகொண்டு, சிறைக்கும்கூடச் சென்றிருக்கின்றார்கள்.

1961 ஆம் ஆண்டில் ஆயுதப் போராட்டம் தொடங்கிய காலங்களில், போராளிகளின் முதன்மைத் தேவைகளான உணவையும், மறைவிடங்களையும் வழங்கினார்கள்; எதிரி நடமாட்டம் பற்றிய தகவல்களைக் கொடுத்தார்கள்; போராளிகளுக்குப் பணம் திரட்டிக்கொடுத்தார்கள்; காயமடைந்த போராளிகளைப் பராமரித்தார்கள்.

புரட்சிகர எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியின் முதன்மைத்துவம்வாய்ந்த முதலாவது காங்கிரசுக்கு வந்த பிரதிநிதிகளில் பதினொரு விழுக்காடானோர் (11%) பெண்களே. 1974 ஆம் ஆண்டளவில் ஒரு சிறு தொகையாக இருந்த எரித்திரியப் பெண் போராளிகளின் தொகை, 1979 ஆம் ஆண்டில் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியில் முப்பது விழுக்காடாக (30%) உயர்ந்தது. வலுவான மக்கள் ஆதரவுடன் வளர்ந்த எ. ம. வி. முன்னணி, தனது பெண் போராளிகளை 1979 ஆம் ஆண்டில் 'எரித்திரியப் பெண்களின் தேசிய சங்கம்' என்ற அமைப்பாக உருவாக்கி, வலுவடையச்செய்தது. எரித்திரியப் பெண்களின் தேசிய சங்கத்தில் பெண் தொழிலாளர்கள், விவசாயப் பெண்கள், சிறு முதலாளித்துவப் பெண்கள் என்று பலதரப்பட்ட பெண்களும் இருந்தனர். தான் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே எரித்திரியப் பெண்களின் தேசிய சங்கம், நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள எரித்திரியப் பெண்களை நிறுவன ரீதியாக ஒருங்கிணைப்பதற்குத் தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது.

எரித்திரியப் பெண்களில், தொண்ணூற்றைந்து விழுக்காட்டிற்கும் (95%) அதிகமானோர் கல்வியறிவற்றவர்களாக இருந்தமை, அவர்களின் அரசியல் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்ததனால், பெண்களின் அறியாமையைப் போக்குவதற்கு எரித்திரியப் பெண்களின் தேசிய சங்கம் முனைந்தது. விடுவிக்கப்பட்ட பகுதிகளிலெல்லாம் இச்சங்கம் தனது கிளைகளை அமைத்துப் பகிரங்கமாகச் செயற்பட்டது. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் கடும் இரகசியமான முறையில், தொழிற்சாலைகளிலும் வேலைத்தளங்களிலும் சிறு, சிறு அமைப்புக்களாகப் பணியாற்றியது. மூளைசாலிகள் இடையேயும் சிறு அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. எதிரியின் படை, பொருண்மியக் கட்டமைப்புக்களில் வேலைசெய்த, அல்லது அவற்றுட் செல்வதற்கு வசதிகொண்ட பெண்கள், எ. ம. வி. முன்னணியினர் எதிரியின் கட்டமைப்புக்களை அழித்தொழிப்பதற்கும் தமது அமைப்புக்குத் தேவையான வழங்கல்களைப் பெற்றுக்கொள்வதற்குமாக பல வீரம்செறிந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.



மக்கள் வீடுதலைச் சேனையின் அங்கத்தவர்களான பல எரித்திரியப் பெண் போராளிகள், வீடாப்பிடியாகப் பல தாக்குதல் அணிகளுக்குத் தலைமைதாங்கியும் சாதாரணப் படை வீராங்கனைகளாகச் செயற்பட்டும் நேரடிச் சமர்களில் திறம்படச் செயலாற்றியும் தமது கைக்குண்டுகளால் எதிரியின் ராங்கிகளைச் சிதைத்தும் அவற்றுள்ளிருந்தோரைக் கைதாக்கியும் போராடினார்கள்.

அரசியல், சமூக நடவடிக்கைகளில் பெண்கள் ஈடுபடுவதற்குத் தடையாயிருந்த, பிற்போக்குவாத -நிலப்பிரபுத்துவப் பண்பாடுகளுக்கு எதிராக, இச்சங்கம் சீரான முறையில் போராடியது.

மக்கள் விடுதலைச் சேனையின் உறுப்பினர்களான பல எரித்திரியப் பெண் போராளிகள், விடாப்பிடியாகப் பல தாக்குதல் அணிகளுக்குத் தலைமை தாங்கியும் -சாதாரண படை வீராங்கனைகளாகச் செயற்பட்டும் -நேரடிச் சமர்களில் திறம்படச் செயலாற்றியும் -தமது கைக்குண்டுகளால் எதிரியின் தாங்கிகளைச் சிதைத்தும் -அவற்றுக்குள்ளிருந்தோரைச் சிறைப்பிடித்தும் போராடினார்கள். இயற்கையான சிக்கல்களால் தடங்கல்களுக்குள்ளாகாமல், கரந்தடிப் (கெரில்லா) போராளிகள் கையாளவேண்டிய ஆயுதங்களுடன் மலைகளில் ஏறியும் -பள்ளங்களில் இறங்கியும் -பசி, தாகத்தால் வருந்தியும் -பலர் தமது கண்களை, கால்களை இழந்தும் -உயிரைக்கொடுத்தும் விடுதலைக்காகவும் கௌரவத்துக்காகவும் போராடினார்கள்.

"பெண்களை அவர்களின் குடும்பக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவிக்கவும் -சமூக உற்பத்தியில் அவர்களின் பங்காற்றலை அதிகரிக்கவும் -பெண்களின் அரசியல், பண்பாட்டுத் தொழில்நுட்ப மட்டங்களை உயர்த்துவதற்குமான ஒரு பரந்துபட்ட திட்டமே எமது அரசியற்கொள்கை".

என்று எ. ம. வி. முன்னணி கூறியதுபோலவே, எரித்திரியா விடுதலை அடையமுன்னரே இத்திட்டத்தைப் பெருமளவில் நடைமுறைப்படுத்திவிட்டது. எ. ம. வி. முன்னணியின் தளப்பிரதேசங்களில் விவசாய, சிறு கைத்தொழில் உற்பத்திகளில் பெண்கள் ஈடுபடுவதுடன், 'பொறி (இயந்திரம்) அறைகளிலும் -மர வேலை செய்யும் இடங்களிலும் -மின்சார அறைகளிலும் -ஆயுதங்களைத் திருத்தும் சாலைகளிலும் -'ஆண்களுக்கு என அமர்த்தப்பட்ட' தொழில்களிலும் ஈடுபடுகின்றனர். எரித்திரியப் பெண் போராளிகளோ மருத்துவப் பிரிவு, கல்வி -தகவல் பிரிவு, பண்பாடு -சமூகநலப் பிரிவு என்பவற்றில் மிகத்திறம்படக் கடமையாற்றுகின்றார்கள்.

எ. ம. வி. முன்னணியினால் காணிச்சீர்திருத்தம் வெற்றிகரமாக நடத்தப்பட்ட பிரதேசங்களில், நில உரிமையற்றவர்கள் எனக்கணிக்கப்பட்ட பெண்கள், சரிசமனான பங்குகளைப் பெற்றிருக்கின்றார்கள். கிராமிய அமைப்புக்களில் பங்குபற்றமுடியாதவர்கள் என்று ஒதுக்கப்பட்ட பெண்கள், இன்று அவற்றில் தீவிரமாகப் பங்குபற்றுகின்றார்கள்; பாடசாலைகளில் சரிசமமாகப் பயிற்றுவிக்கப்படுகின்றார்கள். வயதுவந்த பெண்கள்கூட நிலமானிய அமைப்புக் கட்டுப்பாடுகளை முறியடித்து, எழுத -வாசிக்கக் கற்றுக்கொண்டு, அரசியல் விவகாரங்களில் தீவிரமாக ஈடுபடுகின்றார்கள்.

கட்டாயப் பேச்சுத் திருமணங்கள் இப்போது நடைபெறுவதில்லை. மக்கள் மத்தியில் சீதனத்துக்கு எதிரான மனப்பாங்கையும் தோழமைரீதியில் ஆண் -பெண்களிடையே திருமண உறவை ஏற்படுத்துவதற்குமாக, எ. பெ. தே. ச. தீவிரமாக உழைக்கின்றது.

ஒரு காலத்தில் எரித்திரியாவில் இருந்த, பெண்கள் பற்றிய கீழ்த்தரமான பழமொழிகள், ஆணாதிக்கக் கோட்பாடுகள் எல்லாமே உடைந்து, பெண்களின் சுயமரியாதைக்கும் - நடந்து முடிந்த விடுதலைப் போரில், அவர்களின் வீரம்செறிந்த பங்களிப்புக்கும் -எரித்திரிய ஆண்கள் இன்று மதிப்பும் கௌரவமும் கொடுக்கின்றார்கள். உலகெங்கும் நடந்த விடுதலைப் போராட்டங்களில் எல்லாமே பெண்கள் பங்குகொண்டிருந்தபோதும் -எரித்திரியப் பெண்களின் வீரம் உலகத்தையே ஒருமுறை திரும்பிப் பார்க்கவைத்தது.

ஒரு விடுதலைப் போராட்டத்தில், பெண்ணினம் முழுமையாகப் பங்களிப்புச் செய்யும்பொழுதுதான், அப்போராட்டம் முழுமையும் -செழுமையும் பெறுகின்றது; மண்ணின் விடுதலையும் அப்பொழுதுதான் சாத்தியமாகின்றது. எரித்திரியா இதற்கு ஓர் உயர்ந்த எடுத்துக்காட்டு. **இந்தப் புரட்சிப் பாதையில் தமிழீழப் பெண்ணினமும் வீறுநடைபோட்டுவருகின்றது.** ■

## இரு தலைவர்களும் தமது மூத்த உறுப்பினருடன் நிலைமை குறித்து விரிவாக ஆராய்வு

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள், விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்கள், பிராந்தியத் தளபதிகள் ஆகியோருடன் சிறப்பு மாநாடொன்றை குடாநாட்டில் நடாத்தியுள்ளார். சிறீலங்காப் படையினரின் நடவடிக்கைகள் ஒருபுறமும் சிறீலங்கா அரசின் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் மறுபுறமுமாக உள்ள இன்றைய சூழ்நிலை குறித்து, விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிகின்றது.

இதேவேளை, சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவும் தனது படைத்துறைத் தலைமையுடன் சிறப்பு மாநாடு ஒன்றை நடாத்தி, போர்நிறுத்தக் கோரிக்கை குறித்து ஆராய்ந்துள்ளதாகக் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நியதிகள் மாறலாம்!

சிறு கதை

**தமிழீழத்திலிருந்து ஆதிலட்சுமி சிவகுமார்**

**"நீ வீட்டிலை சும்மாவோ இருக்கிறாய்...? காலமை எழும்பினா இரவு படுக்கப் போகும் வரையும் எவ்வளவு வேலை செய்கிறாய்...?"**

**"செய்யிறன்தான்...அதுக்கு காசே இல்லைத்தானை... அதோடை வீட்டிலை வேலை செய்யிறது பொம்பிளையளின்ரை கடமையெல்லோ..."**

**அக்காவுக்காக அழுவதோ...? சிரிப்பதோ...?**

பனிக்குளிர் கதகதவென்று கக்கிக்கொண்டிருந்தது. மதிலுக்கு மேலாக உயர்ந்து, வட்டமாய்ப் பரந்திருந்த நித்திய கல்யாணிச்செடி, இலை தெரியாமல் பூத்துக்குலுங்கிக்கொண்டிருந்தது. கம்பளிப் போர்வைக்குள் உடல்புதைய, முகம் மட்டும் றோசாப் பூப்போலத் தெரிய, அக்காவின் குழந்தை உறங்கிக்கொண்டிருந்தது. இந்தப் பனிக்குளிரிலும் முழுகிவிட்டு, தலைக்குத் துணிகட்டிக்கொண்டு, மதில் ஓரத்தில் அமர்ந்து, அக்கா சமையல் பாத்திரங்களை மினுக்கிக் கொண்டிருந்தாள். இரவு முழுவதும் குழந்தை அழுதுகொண்டே இருந்தது. அழுத குழந்தையை அமைதிப்படுத்துவதற்குள் விடிந்துவிட்டது. குழந்தை அமைதியாக உறங்கத் தொடங்கியதும் அக்கா வீட்டு வேலைகளில் மூழ்கிவிட்டாள்.

அக்காவுக்குத் திருமணமாகி மூன்று வருடங்களாகின்றன... அக்காவின் கணவர் -அத்தான் ஒருவரோடும் 'சோலிசுரட்டில்லாத' பேர்வழி

காலை ஐந்து மணிக்கு எழுந்து, உடற்பயிற்சி செய்வார். உடற்பயிற்சியை முடித்துக்கொண்டு, கால்முகம் கழுவிக்கொண்டு, பக்கத்திலுள்ள பேப்பர் கடைக்குப் போவார்.

பத்திரிகையோடு ஒன்றிப்போய் அமர்ந்தால், ஏழு முப்பது ஆகும் வரை பத்திரிகையில் ஒரு எழுத்தும் விடாது படிப்பார்!

ஏழு முப்பது என்றவுடன் - ஒரு வினாடிகூடத் தாமதியாது, கிணற்றடிக்குப்போவார். ஏழு நாற்பத்தைந்துக்கு சாப்பாட்டு மேசைக்கு வருவார். எட்டுமணிக்கு நிச்சயமாக அத்தானின் சையிக்கிள் 'கேற்'றைத் தாண்டிவிடும்.

அக்கா மிகவும் சுறுசுறுப்பு! எட்டுமணிக்குள் பம்பரம்போல, என்ன வேகத்தில் சுழன்று, சுழன்று வேலை செய்கிறாள்?

அக்காவை நினைத்துப்பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது!

"கைக்குழந்தையோடை கொக்கா கஸ்டப்படுகிறாள்... கொஞ்சநாள் உன்ரை லீவு முடியும்வரையும் அவளோடை இருந்தியெண்டால், அவளுக்கு எப்பன் ஆறுதலாக இருக்கும்". அம்மாவின் இரப்பால் அக்காவுடன் தங்கவந்து ஒருவாரம் எனக்குக் கழிந்துவிட்டது.

இத்தனை நாளில் அக்கா மீது எனக்கு ஏராளமாய் பரிதாபம்!

"மூத்த பொம்பிள்ளைப்பிள்ளை வீட்டுவேலை எல்லாம் பழகி இருக்கவேணும்". அம்மா சொல்லிச்சொல்லி வீட்டுவேலைகளை முழுமையாய் அக்கா மீது திணித்ததில், அக்காவின் படிப்பு இடைநடுவில் நின்று போனது!

அக்கா விளையாட்டில் வலு கெட்டிக்காரி. "பொம்பிளைப்பிள்ளையள் அடக்க ஒடுக்கமாய் இருக்கவேணும்". அக்காவின் இயல்பான திறமைக்கு முட்டுக்கட்டை விழுந்தது.

"காலாகாலத்திலை நடக்கவேண்டியது நடக்கவேணும்". அப்பாவிடமிருந்த பணத்திற்கு அளவாய் அத்தான் அம்பிட்டார்; அக்காவிற்கு கணவரானார்!

"எங்களுக்கு கஸ்ரம் எண்டாப்போல சும்மாவிட ஏலுமே... மூத்த பிள்ளை... ஊருக்கு சாப்பாடு போடவேணும்" -அக்காவின் திருமணம் சிறப்பாய் நடந்தது!

அத்தானின் கரம்பற்றி, தலை குனிந்தபடி நடந்த அக்காவை, இன்னும் என்னால் மறக்கமுடியவில்லை.

அத்தான் ஒரு அரச உத்தியோகத்தர்.

காலை எட்டுமணிக்குப் புறப்பட்டால், ஆறு மணிக்கு வருவார். இந்தப் பத்துமணி நேரத்துக்குள் அக்காவின் கடமைகளோ ஏராளம்!

வீட்டில் எந்த வேலைக்குமே உதவிக்கு ஆள் வைத்திருக்க, குடும்பப் பொருளாதாரத்தில் இடமில்லை. எனவே எல்லாமே அக்காதான்!

ஒருநாளைக்கு அக்கா அள்ளி ஊற்றுகிற தண்ணீரின் அளவு...? சமயத்தில் விறகுகூட அக்கா கொத்துவாள்!

அனேகமாக காலைவேளைகளில் பரபரப்பு அதிகமாக இருக்கும்!

குழந்தை அழும்; அறைக்குள் ஓடுவாள்!

அடுப்பில் கறி எரிந்து மணக்கும்; அங்கும் ஓடுவாள்!

**அக்காவின் கணவர் - அத்தான் ஒருவரோடும் "சோலி சுரட்டில்லாத" பேர்வழி.**

வாசலில் பால்காரனின் சைக்கிள் மணி கேட்கும்; அங்கும் ஓடுவாள்! இவ்வளவிற்கும் அத்தான் முன்கோலில் பேப்பர் படித்துக்கொண்டே இருப்பார்! அவர் 'சோலிசுரட்டில்லாத மனிதர்'!

சம்பளக் காசைக்கூட அப்படியே கவருடன் கொண்டுவந்து அக்காவிடம் கொடுத்து விடுவாராம். அக்கா ஒருமுறை சொல்லிப் பெருமைப்பட்டிருக்கிறாள்.

அக்காவின் மீது ஏற்படும் பரிதாபம், எனக்குச் சிலவேளை கோபமாகவும் வருவதுண்டு. "நீ அழுபிள்ளையோடை இவ்வளவு கஸ்டப்படுகிறாய்... அத்தான் உதிலை சும்மா தானே இருக்கிறார்... ஒரு வாளி தண்ணி அள்ளித்தந்தா... இல்லாட்டி ஒரு துண்டு விறகு கொத்தித் தந்தா என்ன...?"

என்னுடைய கேள்வி அக்காவைப் பதறவைத்துவிட்டது... ஏதோ கேட்கக்கூடாத கேள்வியை நான் கேட்டுவிட்டதுபோலப் பார்த்தாள்...

"அவர் ஆம்பிளையெல்லே... அவரைப்போய் வீட்டுவேலை செய்யச் சொல்லி... சீ... ஆரன் கண்டால் என்ன நினைப்பினம்...?"

அக்கா சிலவினாடி இடைவெளிக்குப் பிறகு சொன்னாள்; சடாரென்று இதயத்தின் மூலைக்குள் வலித்தது.

"அவன் ஆம்பிளைப்பிள்ளை... அப்படித்தான் நடப்பான்... நீ பொம்பிளைப்பிள்ளை... அவனை மாதிரித் திரிய ஏலாது..." அம்மா அடிக்கடி சொல்வது நினைப்புவந்தது.

"அந்த் நேரம் பெரியண்ணை படலேக்கை வரேக்கை, தான் வாறன் எண்டு காட்டுறதுக்கு செருமுவார்... நாங்கள் பெட்டையள் எல்லாம் எழும்பி உள்ளுக்கு போயிடுவம்... அவருக்கு பெட்டையள் கூடிக்கதைக்கிறது பிடிக்காது..." அம்மாவின் அம்மா -அம்மா -அக்கா என்று

**"அவன் ஆம்பிளைப்பிள்ளை...அப்படித்தான் நடப்பான்... நீ பொம்பிளைப்பிள்ளை, அவனை மாதிரித் திரிய ஏலாது..." அம்மா அடிக்கடி சொல்வது நினைவு வந்தது.**

இன்றுவரை தொடரும் கைவிலங்கு; இதை யார் உடைக்கப்போகிறார்கள்?

என்னுடைய மௌனம் அக்காவைப் பாதித்திருக்கவேணும்...

"அவர் கால்மை எட்டுமணிக்குப் போனா... பின்னேரம் ஆறுமணிவரையும் அங்கை வேலை செய்யிறவர்... வீட்டிலையும் கேட்கிறது நல்லதில்லை... நான் வீட்டிலை சும்மாதானை இருக்கிறனான்... செய்வன்..."

என்னைச் சமாளிப்பதுபோல அக்கா சொன்னாள்...

"நீ வீட்டிலை சும்மாவோ இருக்கிறாய்...? காலமை எழும்பினா இரவு படுக்கப்போகும்வரையும் எவ்வளவு வேலை செய்கிறாய்...?"

"செய்யிறன்தான்... அதுக்குக் காசே? இல்லைத்தானே... அதோட வீட்டிலை வேலைசெய்யிறது பொம்பிளையளின்ரை கடமையெல்லோ...?"

அக்காவுக்காக அழுவதோ? சிரிப்பதோ?

"நீ யோசிச்சுப் பார்... நீ இந்த வீட்டிலை செய்யிற ஒவ்வொரு வேலைக்கும் சம்பளம் கணக்குப் போட்டுப் பார்த்தா, அத்தானைவிட உனக்குத் தானே காசுகூட..."

அக்கா பெரிய பகிடியைக் கேட்டுவிட்டதைப்போல, குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்!

"வீட்டிலை பொம்பிளையள் செய்யிற, செய்யவேண்டிய வேலையளுக்கும் ஆரன் கணக்குப் போட்டுப் பார்க்கிறதோ?"

"சரி... கணக்குப்போட்டுப் பார்க்க வேண்டாம்... நீ வீட்டிலை சும்மா இருக்கேல்லை... அத்தானுக்கு ஈடாக, நீயும் உன்ரை சக்தியைச் சிலவழிச்சு, உழைக்கிறாய் என்பதை விளங்கிக்கொள்ளுறியோ?"

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்...



www.tamilarangam.net



# தமிழ் மக்கள் தமது....

ஆனால் சந்திரிகா அவர்களின் அக்கறை குறைவுற்றுக் காணப்படுகின்றது என்று மட்டுமே கூறுவேன். நாங்கள் அவர் அடுத்த நடவடிக்கையை எடுக்கும்வரை பொறுத்திருக்கின்றோம்" என்றார்.

தமிழீழ எல்லைகளுள் சில இடங்களை சிறீலங்காப்படை ஆக்கிரமித்துள்ளமை பற்றிக் கேட்டபோது, "ஆப்கானித்தானிலும் வியட்னாமிலும், இராணுவம் எல்லைகளை ஆக்கிரமித்தது; ஆனால் பின்னர் வாபஸ் வாங்கிச்சென்றன. எமது பிரதேசங்களில் சிலவற்றை சிறீலங்காப்படை தமது கட்டுப்பாட்டில் ஆக்கிரமித்திருக்கலாம். ஆனால் வெளியேறவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர். எல்லைப் பிரதேசங்களுள் ஆக்கிரமிப்பது எளிதாகத் தோன்றலாம். ஆனால் அவர்களால் அவற்றை, அவர்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியுமா?" என்றார் . செய்தியாளரின் வோறொரு கேள்விக்குப் பதிலளித்த தலைவர் பிரபாகரன் அவர்கள், "சிறீலங்காப்படை அமைதிபற்றி தர்மசங்கடமான நிலையில் உள்ளனர். அவர்களுக்கு போரைத் தொடர்ந்து, ஆயுதபேரங்களைத் தொடரவேண்டிய தேவை உள்ளது" என்றார். "நீங்கள் முன்னைய போர் நிறுத்தத்தை போராளிகளை மீளத்திரட்டுவதற்கு பயன்படுத்தவில்லையா?" எனச்செய்தியாளர் கேட்டபொழுது, "போர்நிறுத்த நேரத்தில் சிறீலங்காப் படை இதைச் செய்யவில்லை என நீங்கள் நினைக்கின்றீர்களா?" என, எதிர்க்கேள்வி எழுப்பிய தேசியத் தலைவர் அவர்கள், "பாரிய அளவில் அதிக எண்ணிக்கையான ஆயுதங்களை போர்நிறுத்த நேரத்திலேயே வாங்கிக்கொண்டனர்; இருதரப்பினரும் தம்மை பலப்படுத்திக்கொண்டனர்" என்றார். "நீங்கள் வார்த்தையளவிலேயே சமாதானம் பற்றிப் பேசுகிறீர்கள்" எனும் கருத்துப்பற்றி உங்கள் பதில் என்ன? என செய்தியாளர் கேட்டபொழுது, "இதே கருத்து மறுபக்கத்துக்கும் பொருந்தும்; நான் வேண்டுமென்று யாரையும் ஏமாற்றவும் மாட்டேன்; யாரும் என்னை ஏமாற்ற அனுமதிக்கவும் மாட்டேன்" என்றார். இருபத்தியிரண்டுகால கரந்தடிப் (கெரில்லா) போரில் நீங்கள் கூற விரும்பும் படிப்பினை என்ன எனக்கேட்டதற்கு, "துணிவுடமை என்றும் வெற்றி தரும்" என்றார். ■

# இத்தாலி மாவீரர் நாள்.....

வெங்கும் தமிழோசை கேட்கும்..." என்ற உயிர்ப்பாடல்களுக்கே உருவம் கொடுத்தனர். பின்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதியும், இத்தாலிக் கிளைப் பொறுப்பாளரான திரு. மேதா அனைத்துலகச் செயலக மாவீரர் நாள் செய்தியை வாசித்தார்.

நிகழ்வின் இறுதிக் கலைத் தோற்றமாக, இத்தாலிவாழ் தமிழர் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் வழங்கிய "வேள்வித் தீயில் வெண்புறாக்கள்" நாடகம் அரங்கேறிற்று. தனிமனித சரித்திரமாக, எங்கள் ஆன்மாவுடன் கலந்துவிட்ட தளபதி கேணல் கிட்டண்ணாவுக்கும், தேச விடுதலைக்காக அவருடன் இறுதிவரை நின்று கடலுடன் அக்கினியாக சங்கமித்த ஒன்பது வேங்கைகளுக்கும் சமர்ப்பணமாக அந்நாடகம் படைக்கப்பட்டது.

இந்நாடகம் இந்தியாவின் நேர்மையற்ற, கோழைத்தனமான தமிழீழ அழிப்பு முயற்சிகளின் உயர்வடிவத்தை மக்களுக்கு மீண்டும் நினைவுபடுத்தியது. அனைத்துலகம் ஒன்று திரண்டு, அச்செயலைக் கண்டிக்காமல் தடுக்காமல் பேசாதிருந்த கபடத்தனத்தையும், தற்காலிகமாக புலம்பெயர்ந்து வாழும் தமிழீழத் தேசத்தவரான எம்மத்தியில், நாம் தமிழீழ தேசத்திற்குச் செய்யவேண்டிய எமது கடமையையும் உணர்த்தியது. இரவு 10. 45 மணியளவில் மாவீரர்களின் தூய ஆன்ம ஒளியை மனதில் சுமந்து அவர்களை எண்ணி, அவர்கள் நினைவுடன் நிகழ்ச்சி முடிவுற்றது. சுமார் 2000 தமிழீழ மக்கள் வாழும் பலெர்மோ நகரில் 1200 இற்கும் மேற்பட்ட தமிழீழமக்களும், இத்தாலிய மக்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. ■

# சிறிபுரத்தில் கற்பகச்சோலை

தமிழீழத்தில் இருக்கின்ற பனை வளத்தை 2000 ஆண்டளவில் இரட்டிப்பாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட பாரியதொரு திட்டமாகிய கற்பகச்சோலை பனை நடுகைத்திட்டத்தின் அடிப்படையில், வடமராட்சி சிறீபுரம் பனை பயிற்சி நிலையத்தை அண்மித்த பகுதிகளில் 10, 000 பனை விதைகள் நாட்டப்பட்டு வருகின்றன.

கற்பகச்சோலை பனை நடுகைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியினரால் நேரடியாக இப்பனை நடுகை மேற்கொள்ளப்படுகின்றது. மேற்படி நிறுவனம் இம்மாத முற்பகுதியில் கற்பகச்சோலை திட்டத்தின் கீழ் 30, 000 பனை விதைகளை யாழ். கல்லுண்டாய் உப்பளப்பகுதியில் நடுகை செய்தமை குறிப்பிடத்தக்கது. ■

# விடுதலைப்புலிகள் தமது.......

நீட்டுவதற்காக அவசரப்படவில்லை; அமைதியை அதிவிரைவாக ஏற்படுத்தப்போவதாக நான் நினைக்கவில்லை" என்றார்.

விடுதலைப் புலிகள் முன்னைய போர் நிறுத்தத்தை அவர்களுடைய பலத்தை மீளக்கட்டி எழுப்பப் பயன்படுத்தவில்லையா" எனக்கேட்டதற்கு, "சிறீலங்கா அரசு அப்பொழுது என்ன செய்தது என்பதையும் பொறுத்திருக்கிறது. பாலஸ்தீனிய விடுதலை அமைப்புப் போன்ற அமைப்புக்கள் ஜனநாயகத்துக்குத் திரும்ப முடியுமென்றால், விடுதலைப் புலிகள் திரும்ப முடியாதா?" என்றார். நீங்கள் இராணுவ நடவடிக்கைபற்றி எண்ணவில்லையா? எனக்கேட்டதற்கு, "மற்றைய முயற்சிகள் தோற்குமானால், நான் இராணுவ நடவடிக்கையை நிராகரிக்கமாட்டேன்" என்று கூறினார் . ■

# ஆனையிறவுப்.....

சங்குப்பிட்டிப் பாதையைத் திறந்துவிடும்படி வலியுறுத்துகின்றனர். இதற்குப்போதிய காரணங்களைக் கூறாது, நிராகரித்துவரும் சிறீலங்கா, பாப்பரசரின் வருகையைச் சாட்டாகவைத்து, மீளவும் தனது கபடநோக்கத்தை நிறைவேற்றத் துடிக்கிறது. இதற்கு விடுதலைப் புலிகள் மறுப்புத் தெரிவித்தால், தமிழ்க் கத்தோலிக்க மக்களின் மதசுதந்திரத்தைத் தடைசெய்ய, விடுதலைப் புலிகள் முயற்சிப்பதாக, போலிப்பிரச்சாரம் ஒன்றை முடுக்கிவிடுவது, சிறீலங்காவின் மற்றொரு உள்நோக்காக உள்ளதாக அவதானிகள் கருதுகின்றனர். ■

---

தமிழர் கலை, பண்பாட்டுக் கழக யேர்மன் கிளை நடாத்தும்

# தளபதி கிட்டு நினைவுப்போட்டி - 1995

பலநூறு ஆண்டுகள் அடிமைப்பட்டிருந்த தமிழ்மண்ணை, மீண்டும் தமிழரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த, **முதற்தளபதியான கேணல் கிட்டு** அவர்களை நினைவுகூருமுகமாக, தமிழர் கலை, பண்பாட்டுக் கழகம் **கவிதை, கட்டுரை,பேச்சு ,ஓவியப் போட்டி**களை நடாத்தவுள்ளது.

## போட்டிகளுக்கான விதிமுறைகள்

10 வயதிற்குட்பட்டவர்கள் கீழ்ப்பிரிவு எனவும், 11 வயதிலிருந்து 15 வயதுவரை நடுப்பிரிவு எனவும், 16 வயதிலிருந்து 19 வயதுவரை மேற்பிரிவு எனவும், 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் அதிமேற்பிரிவு எனவும் நான்கு பிரிவுகளாகப் பிரித்து திறமை பரிசீலிக்கப்படும்.

**கீழ்ப்பிரிவு:** 08.01.1984 அன்றும் அதற்குப்பின்னரும் பிறந்தவர்கள்.
**நடுப்பிரிவு:** 08.01.1979 இற்கும் 07.01.1984 இற்கும் இடையிற் பிறந்தவர்கள்.
**மேற்பிரிவு:** 08.01.1975 இற்கும் 07.01.1979 இற்கும் இடையிற் பிறந்தவர்கள்.
**அதிமேற்பிரிவு:** 07.01.1975 அன்றும் அதற்கு முன்னரும் பிறந்தவர்கள்.

**'தளபதி கேணல் கிட்டு'** என்ற தலைப்பில் பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடைபெறும்.

**கீழ்ப்பிரிவுக்கான கட்டுரை** 80 சொற்களுக்கு மேற்படாமலும் பேச்சு 3 நிமிடங்களுக்கு மேற்படாமலும் அமைய வேண்டும்.

**நடுப்பிரிவுக்கான கட்டுரை** 140 சொற்களுக்கு மேற்படாமலும், பேச்சு 5 நிமிடங்களுக்கு மேற்படாமலும் அமையவேண்டும்.

**மேற்பிரிவுக்கான கட்டுரை** 200 சொற்களுக்கு மேற்படாமலும், பேச்சு 7 நிமிடங்களுக்கு மேற்படாமலும் அமையவேண்டும்.

**அதிமேற்பிரிவுக்கான பேச்சு** 10 நிமிடங்களுக்கு மேற்படாமல் அமையவேண்டும்.

அதிமேற்பிரிவினருக்கு கட்டுரைப் போட்டிகள் நடாத்தப்படமாட்டாது.

**கவிதைப் போட்டிகள், மேற்பிரிவினருக்கும் அதிமேற்பிரிவினருக்கும் மட்டுமே நடாத்தப்படும்.**

**மேற்பிரிவினருக்கான கவிதை 16** வரிகளுக்கு மேற்படாமலும், **அதிமேற்பிரிவினருக்கான கவிதை 32** வரிகளுக்கு மேற்படாமலும் அமையவேண்டும். எழுதப்பட்ட கவிதை ஓசை நயத்துடன் படித்துக்காட்டும்படி கேட்கப்படுவர். கவிதையின் பிரதியொன்று போட்டி மண்டபத்தில் கையளித்தல் வேண்டும்.

கவிதை, கட்டுரை, பேச்சு ஆகிய துறைகளுக்கான போட்டியாளர்களின் வசதிகருதி, மூன்று பிரிவுகளாக **டோட்முண்ட், கனோவர், ஸ்ருட்காட்** ஆகிய நகரங்களில் போட்டிகள் நடாத்தப்பட்டு, தெரிவுசெய்யப்படும் போட்டியாளர்கள் இறுதிப்போட்டிக்கு அழைக்கப்படுவர்.

## ஓவியப்போட்டிக்கான விதிகள்

ஓவியப்போட்டியில் பங்குபற்றுபவர்கள் ஓவியங்களை வரைந்து, வரையப்பட்ட ஓவியத்தின் பின்பக்கத்தில் கையொப்பமிட்டு, பெயரும் முகவரியும் குறிக்கப்பட்டு, விண்ணப்பத்துடன் இணைத்து, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பு முகவரிக்கு **07.01.1995** இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். தெரிவுசெய்யப்படும் போட்டியாளர்கள் பின்னொரு நாளில் ஓவியப்போட்டிக்கு அழைக்கப்படுவர். ஓவியங்கள் போட்டியாளரின் சுதந்திரமான, சுயமான கற்பனையில் வரையப்படல் வேண்டும்.

**கீழ்ப்பிரிவினரும், நடுப்பிரிவினரும் வரையவேண்டிய ஓவியத்தின் அளவு 21 செ. மீ. x 30 செ. மீ. பயன்படுத்தும் வர்ணங்கள்:**

| | |
|---|---|
| **வர்ணக்கட்டி** | **(Farbkreide)** |
| **மெழுகுவர்ணம்** | **(Wachsmalstift)** |
| **வர்ண எழுதி** | **(Buntstift)** |
| **வர்ண இழைத்தடி** | **(Filzstift)** |
| **வரைவு வர்ணம்** | **(Tuschfarbe)** |
| **நீர் வர்ணம்** | **(Wasserfarbe)** |

**மேற்பிரிவினரும் அதிமேற்பிரிவினரும் தீட்டவேண்டிய ஓவியத்தின் அளவு 30 செ. மீ x 42 செ. மீ. பயன்படுத்தும் வர்ணம்: நீர்வர்ணம்: (Wasserfarbe) மட்டுமே.**

## தெரிவுசெய்யவேண்டிய தலைப்பு:

**கீழ்ப்பிரிவு:** போட்டியாளரே தலைப்புக்கொடுத்தல் வேண்டும்.

**நடுப்பிரிவு:**
1. 2000 ஆம் ஆண்டில் தமிழீழம்.
2. எங்கள் பாட்டனும் பாட்டியும் எங்கே?
3. குண்டுகளுக்கிடையே என்னைப்போல் சிறுவர்கள்.

**மேற்பிரிவு:**
1. அன்னிய மண்ணில் தமிழர்.
2. மாவீரர்.
3. நான் தொலைத்துவிட்ட எனது மண்.

**அதிமேற்பிரிவு:**
1. பொருண்மிய மேம்பாடு.
2. ஓடு பகையே
3. விழ, விழ எழுவோம்.

அனைத்துப் போட்டிகளிலிருந்தும் பரிசுக்குரியவராகத் தேர்ந்தெடுக்கும்பட்சத்தில், வயதை உறுதிப்படுத்த, அடையாள அத்தாட்சிப்பத்திரம் கேட்கப்படுவர்.

அனைத்துப் போட்டிகளுக்கும் விண்ணப்பஞ்செய்வதற்கான இறுதிநாள்: **07.01.1995.**

**தொடர்பு முகவரி:** K. S. Nathan,
Steinstr, 18,
37441, Badsachsa.

**தொலைபேசி:** 05523 / 8608

தமிழர் கலை, பண்பாட்டுக் கழகம்,
**யேர்மன் கிளை.**

**'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விமானக் குண்டுவீச்சினால் அச்சுவேலியில் கொல்லப்பட்டோர்



கணபதிப்பிள்ளை கிருஸ்ணராசாவின் சடலம்

கடந்த புரட்டாதி மாதத்தில், அச்சுவேலி -பத்தமேனியில் சிறீலங்காவின் போர்விமானங்கள், உலங்குவானூர்திகள் நடத்திய குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதலுக்குப் பலியான நான்கு பேர்களின் விபரம்:-

**திரு. கணபதிப்பிள்ளை கிருஸ்ணராஜா (34), இவரின் மகள் கெங்காதேவி கிருஸ்ணராஜா (05), திருமதி இராசையா பாலசரஸ்வதி (54), திருமதி சிதம்பரப்பிள்ளை செல்லாச்சி (87).** இச்சம்பவத்தின் போது 20 பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களை, ஏற்றிவந்த செஞ்சிலுவைச்சங்க அம்புலன்ஸ் வண்டி மீதும், உலங்குவானூர்தி தாக்குதலை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.



கிருஸ்ணன் சிதம்பரி, சின்னப்பு சின்னாசி ஆகியோரின் சடலங்கள்

தாக்குதலுக்கு அஞ்சி இடம்பெயர்ந்து வந்து, ஆவரங்கால் சிவன்கோவிலில் தஞ்சமடைந்தவர்கள் மீதும், உலங்குவானூர்தி தாக்குதலை நடாத்தியது. இத்தாக்குதலில் இருவர் கொல்லப்பட 12 க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இதில் கொல்லப்பட்டோர் விபரம்:-

**திருமதி கிருஸ்ணன் சிதம்பரி (68) அச்சுவேலி தெற்கு, திருமதி சின்னப்பு இன்னாசி (55) அச்சுவேலி.** ■

## 7 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

*1987 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21, 22 ஆம் நாட்களில் இந்தியப் படையினரின் நடவடிக்கையால் யாழ். பொதுமருத்துவமனையில் கடமையின்போது உயிர்நீத்த கீழ்வரும் உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு*

### எமது கண்ணீர் அஞ்சலிகள்

1. மருத்துவ வல்லுநர் எஸ். சிவபாதசுந்தரம்.
2. மருத்துவ கலாநிதி கே. பரிமேலழகர்.
3. மருத்துவ கலாநிதி கே. கணேசரத்தினம்.
4. திருமதி பா. வடிவேலு.
5. செல்வி லீலாவதி முத்தையா.
6. செல்வி மங்கையர்க்கரசி இராமநாதன்.
7. திரு. கே. செல்வராஜா.
8. திரு. கே. கிருஸ்ணராசா.
9. திரு. மு. துரைராஜா.
10. திரு. வி. சண்முகலிங்கம்.
11. திரு. வி. வரதராசன்.
12. திரு. கே. வேதார்ண்யம்.
13. திரு. ஜோன் பீற்றர்.
14. திரு. இ. சுகுமார்.
15. திரு. க. சிவலோகநாதன்.
16. திரு. எஸ். ஜெகநாதன்.
17. திரு. கே. சிவராசா.
18. திரு. கோ. உருத்திரன்.
19. திரு. க. மார்க்கண்டு.
20. திரு. இ. இரத்தினராசா.
21. திரு. க. நவரத்தினம்



**பணிப்பாளர்,**
**உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.**
**பொதுமருத்துவமனை,**
**யாழ்ப்பாணம்,**
**19.10.1994.**

# இந்தியப் படையினரின் பயங்கரவாதம்

# வரலாற்றில் கறை ஏற்படுத்திய யாழ். மருத்துவமனைப் படுகொலைகள்!

**1987** ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21 ஆம், 22 ஆம் நாட்கள்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சரித்திரத்தில் இரத்தக்கறை படிந்த கரிநாட்கள்.

அன்று ஒரு தீபாவளி நாள். தமிழரின் வரலாற்றில் அதுவொரு கறுப்பு நாளாகிவிட்டது.

அக்டோபர் பத்தாம் நாள் 1987 ஆம் ஆண்டு, இந்திய அமைதிப் படை இராணுவ நடவடிக்கையை மிகத்தீவிரமாகத் தொடங்கியதால், கிராமப்புறங்களிலுள்ள மருத்துவமனைகள் யாவும் செயலிழந்துபோய் இருந்தன; போக்குவரத்துக்கள் சீர்குலைவு அடைத்திருந்தன.

ஏராளமான மக்கள் கொல்லப்பட்டும், காயப்பட்டும் இடம்பெயர்ந்த ஓர் அவலநிலை நிலவியது.

யாழ்ப்பாணம் பொது போதனா மருத்துவமனை பல இன்னல்களுக்கும் நெருக்கடிகளுக்குள்ளும் மத்தியில் அப்போது இயங்கிக்கொண்டிருந்தது.

குடாநாட்டின் மூலை முடுக்குகளிலிருந்தும்கூட காயப்பட்டவர்கள் இங்கு தஞ்சம் புகுந்தார்கள்.

வேலைப்பழு, போக்குவரத்துச் சிக்கல், படையினரின் நடவடிக்கை என்பவற்றினால் பல மருத்துவர்களும், தாதிகளும், மருத்துவமனை ஊழியர்களும் போதனா மருத்துவமனையிலேயே தங்கி தமது கடமைகளைச் செய்துவந்தார்கள்.

### துயரமான நிகழ்வு

அக்டோபர் 21 ஆம் நாள் மாலை 4.10 மணி இருக்கும். மருத்துவமனை, நோயாளிகள் என்று கூடப் பாராமல், உள்ளே புகுந்த இந்தியப்படை, நுழையும்போதே துப்பாக்கி வேட்டுக்களை சரமாரியாகத் தீர்த்தவண்ணமே வந்தது.

மருத்துவமனையின் நடைபாதை, எக்ஸ்ரே பிரிவுக் கட்டடம், மருத்துவர்களின் ஒய்வு அறை நடைபாதை, அலுவலகம், மேலே மருத்துவர்களின் விடுதி என்பவற்றில் இந்தியப் படை கண்டபடி சுட்டதில் பலர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

குறிப்பாக யாழ். பரியோவான் கல்லூரியில் பயின்று, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட முதற் தொகுதி மருத்துவபீட மாணவர்களில் ஒருவராகப் பயின்று, மருத்துவராக வெளியேறியது முதல் யாழ். போதனா மருத்துவமனையிலேயே சத்திர சிகிச்சைப் பிரிவில் கடமைபுரிந்த மருத்துவர் சி. கே. கணேசரட்ணம் மற்றும் மருத்துவர் எஸ். பரிமேலழகர், பிரதமதாதி திருமதி பி. வடிவேலு, தாதிகளான செல்விகள் மங்கையர்க்கரசி, லீலாவதி மருத்துவமனை மேற்பார்வையாளர்களான திரு. செல்வராஜா, எஸ். சீவரட்ணம், அம்புலன்ஸ் சாரதி திரு. வை. சண்முகலிங்கம் மற்றும் மருத்துவமனையின் துடிப்பான சிறந்த ஊழியர்களான திரு. பீற்றர், திரு. எம். துரைராஜா போன்ற பலர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

இவர்களுடன் படையினரின் நடவடிக்கையினால் காயப்பட்ட நோயாளிகளும், அச்சத்தினால் தஞ்சம்புகுந்த உறவினர்களும் சேர்த்தே கொல்லப்பட்டனர்.

மொத்தத்தில் இரண்டு மருத்துவர்கள், பிரதமதாதி உட்பட மூன்று தாதிகள், இரண்டு மேற்பார்வையாளர்கள், பதினேழு மருத்துவமனை ஊழியர்கள் சகிதம் நோயாளர்கள் அவர்களது உறவினர்களாக மொத்தம் அறுபத்தி எட்டுப்பேர் மருத்துவமனை வளவினுள்ளேயே கொல்லப்பட்டனர்.

அன்றைய இரவு பூராவும் படையினர் அங்கேயே நிலைகொண்டிருந்தனர்.

காயப்பட்டவர்கள் உதவிகேட்டு அவலக் குரல் எழுப்பியபோதெல்லாம் துப்பாக்கி வேட்டுக்களே பதில்கூறின.

தாகத்தினால் தண்ணீர்கேட்ட குழந்தைகள், காயப்பட்டவர்கள், வயோதிபர்களுக்குக்கூட அதே கதிதான்.

முதலுதவிச் சிகிச்சை அளிக்கப்பட்டாலே உயிர் காப்பாற்றப்பட்டிருக்கக்கூடிய நிலையிலிருந்த பலர், சிகிச்சை மறுக்கப்பட்ட நிலையில் உயிர் துறந்தனர்.

சத்தம், முனகல், அசைவு, அபயக்குரல் எழுப்பியபோதெல்லாம் துப்பாக்கி வேட்டு தீர்க்கப்பட்டதால் ஒரு குழந்தை, சிறுபிள்ளைகள் உட்பட பலர் இறக்கவும் நேரிட்டது.

மாரடைப்பு ஏற்பட்டு சிவபுராணம் பாடியவாறே ஒரு வயோதிபரும் இறந்தார்.

### 22. 10. 1987

முதல் நாள் தனது கடமைகளை முடித்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றிருந்த குழந்தை மருத்துவ வல்லுநர் ஏ. சிவபாதசுந்தரம் அவர்களுக்கு அன்று நடந்த அவலம் தெரியாது.

அதிசிறப்பு சிகிச்சைப் பிரிவில் இளம்பிள்ளைவாத நோயினால் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த தனது நோயாளியான குழந்தை ஒன்றைப் பார்க்க, மருத்துவமனையின் பின்புற வாசலினூடாக அவர் வந்தார். சம்பவங்களைக் கேள்விப்பட்டு தனது சக மருத்துவர்களையும், ஊழியர்களையும் காப்பாற்றும் முகமாக படையினருடன் கதைப்பதற்காக உள்ளே வந்தவர், காவலுக்கு நின்றவனால் கொல்லப்பட்டார்.

அதன் பின்னர் மறுநாள், அனைவரினது உடல்களும் ஒன்றாகச் சேர்த்து, மருத்துவமனையின் பின்புறத்தில் பிரேத அறைக்கு அருகாமையில்போட்டு தகனம்செய்யப்பட்டன.

### ஈடுசெய்யப்படாத இழப்பு

1983 ஆம் ஆண்டின் பின்னர் இங்கு ஏற்பட்ட நெருக்கடியான சூழ்நிலையைச் சாட்டாக வைத்துக்கொண்டு, மருத்துவர்கள் சிலர் ஏனைய பிரதேசங்களுக்கும் பிறநாடுகளுக்கும் பறந்துகொண்டிருந்வேளையில், மனம் தளராது -சஞ்சலப்படாது - ஆசை வார்த்தைகளில் எடுபடாமல் தொடர்ந்து யாழ். போதனா மருத்துவமனையில் குழந்தை மருத்துவ வல்லுநராகப் பணிபுரிந்தவர் மருத்துவர் ஏ. சிவபாதசுந்தரம் அவர்கள்.

எவரையும் வெட்கித் தலைகுனியவைக்கும் யாழ்ப்பாணம் பொது மருத்துவமனைப் படுகொலைகள், வரலாற்றிலே கறைபடிந்த அத்தியாயங்களாகிவிட்டன. ■

**- மருத்துவர் -**
**எஸ். பி. ஆர். சீர்மாறன்.**

# கடலன்னை...

"எங்கட பிள்ளையள்தான் எங்கையோ ஆமியை அடிச்சிட்டாங்கள்போல. இன்னும் எவ்வளவு நேரம் கிடக்குது விடியிறதுக்கு?"

என்று, செய்தித்தாளைப் பார்த்துச் செய்தி அறியவேண்டும் என்ற ஆவலில், மளமளவென நடுஇரவிலேயே படுக்கையைச் சுருட்டி வைத்தவர்களும்,

"ஆர் பெத்த பிள்ளையோ? எப்பதான் எங்களுக்கும் பிள்ளையளுக்கும் விடியப்போகுதோ?"

என்ற ஆதங்கத்துடன் கண்கள் கலங்கியவாறு, சுவரோடு சாய்ந்து, அமர்ந்து விடியும்வரை விழித்திருந்தவர்களுமாய் மக்கள் பரபரப்படைந்தனர்.

"ரைட். கட்டளைக்கப்பல் அவுட்".

என்று உற்சாகத்துடன் கூறிக் கொண்டாலும், அங்கயற்கண்ணியின் நினைவு எல்லோர் மனங்களிலும் மோதியது. போராளிகள் பரபரப்படைந்தனர்.

சீறியெழுந்த அலையை அந்த இருட்டிலேயே மீண்டும், மீண்டும் உற்றுப்பார்த்தார்கள்.

'என்னோடு கலந்துவிட்ட என் மகளை எதற்காக நீங்கள் வீணாகத் தேடுகின்றீர்கள்?'

என்று. தம்மைப் பார்த்துக் கேட்பதுபோன்று ஆர்ப்பரித்த கடலைப் பார்த்து,

'ஏன் நாங்கலெல்லாம் உனக்குப் பிள்ளையள் இல்லையோ? ஏன் எங்களை மட்டும் விட்டிருக்கிறாய்?

என்று மனதுக்குள் கோபப்பட்டுக் கொண்டார்கள்; ஆனால் அடுத்த நிமிடமே கோபம்மாறி,

'எங்கள் தோழிகள், தோழர்களையெல்லாம் சுமக்கின்றவள் இவள்தானே' என்ற எண்ணமே மேலோங்கியது. அங்கயற்கண்ணியின் நினைவு சுமையாய் அழுத்த, கனத்த உள்ளங்களோடு திரும்பினார்கள். காங்கேசன்துறைக் கடற்பரப்பில் காற்றோடு கலந்த அங்கயற்கண்ணி, ஒவ்வொரு போராளியினது குருதிச் சுற்றோட்டத்துடனும் கலந்துகொண்டாள்; ஆழ்மனதிலே அழுத்தமாகப் பதிந்துகொண்டாள். இன்னும் இன்னும் கோடிக் கணக்கான நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் பேசப்படப்போகும் வரலாறாக ஆனாள்.

**தீவுப்பகுதியைக் கைப்பற்றும் நோக்கில் சிறீலங்காப் படையினர் எடுத்த நடவடிக்கையின் ஒரு கட்டமாக, வேலணையை ஆக்கிரமிக்க முயன்றபோது, தாய்க்கோழி தன்குஞ்சுகளைப் பருந்திடமிருந்து பாதுகாக்கவேண்டித் தன்சிறகுகளை விரித்து, குஞ்சுகளை மூடிக்கொண்டது. இன்று அந்தக் குஞ்சு, பருந்தின் காலொன்றையே முறித்துப் போட்டுவிட்டது.**

* * *

இந்திய வல்லாதிக்கத்தால், கேணல் கிட்டு அவர்களும் அவரின் தோழர்களும் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட நாளில், தன்னைப் புலியாக்கியவள், தன்னையும் சரித்திரமாக்கினாள். ■

www.tamilarangam.net


# நித்திரைக்கு இதுவல்ல நேரம்!



திக்கெட்டும்
பகைவன்
திரண்டு
வந்துள்ளான்
நித்திரைக்கு
இதுவல்ல
நேரம்.


மகளே!

நெற்றித்
திலகமிட்டு
நின்னை
அனுப்புகிறேன்
வெற்றிக்
கனி பறித்து
வீடு திரும்பு.





கடந்த புரட்டாதி மாதம் அச்சுவேலி-பத்தமேனியில் குண்டு வீச்சுக்குப் பலியான சிறுமி கெங்காதேவி கிருஸ்ணராஜா (வயது 5)



## பீரங்கி வாய்பிளந்த படகுகள் எங்கே போயின?

முந்தியொரு காலம்
முத்துக் குளித்த கடலில்
எங்கள் முகவரிகள் தொலைந்தன.
தமிழன் வாழ்வு குருதிப் பிசுபிசுப்பில்
குளித்துக் கொண்டது.
இந்தப் பீரங்கி வாய்பிளந்த
படகுகளோடு எத்தனை
வலைவீசிய கைகள் வெந்து வீழ்ந்தன!
எத்தனை நெஞ்சு தவித்த
நீண்ட பயணங்கள்
தண்ணீரிற் தத்தளித்தன!
கரைதொடாத கால்களுக்குள் புதுவீரியம்.
நேற்று வங்கக்கடல் பொங்கியதா?
காற்று வந்து சேதி சொன்னது.
வானத்தின் உச்சி தொட்டு
வியப்பின் எல்லை நின்று
விளையாடியவர்களே!
செய்யமுடியாத ஒன்றில்லை.
சாவுக்குத் தேதி வைத்தீர்.
நிலவு சிரித்துநின்ற நள்ளிரவில்
தூரத்தே கேட்ட வெடிப்பொலியில்
உங்கள் முகம் பூரித்துப்போனது.
நேற்றைய பொன்விலங்கு
பொசுங்கிய தீயில் கால்கள் எட்டி நடந்தன
எங்களுக்குள் எம்மைப்போலத்தானே
வாழ்ந்தார்கள்!
எப்படிக் காற்றிலே படகெடுத்துச் சென்றார்கள்?
எப்படி
உருமாறிப்போன தேசத்துத்தென்றலில்
தீயாகிப் போனார்கள்?
உருக்கையொத்த உரமான மனிதர்களானார்கள்?
சற்று இந்தக் காற்றில்
காதை வைத்து உற்றுக் கேளுங்கள்.
கரைமோதிக் கதறியழும்
அலைகளை உற்றுப் பாருங்கள்.
எம்மிடம் புதிதாக ஏதோ
சொல்கின்றன!



1994-08-16 அன்று காங்கேசன்துறையில் வைத்து,
கப்டன் அங்கயற்கண்ணியால் தகர்க்கப்பட்ட தலைமைக் கப்பல்

**இந்தப் பீரங்கி வாய்பிளந்த படகுகளோடு எத்தனை வலை வீசிய கைகள் வெந்து வீழ்ந்தன.**



1994-09-19 அன்று
கற்பிட்டிக்கடற்பரப்பில் வைத்து
லெப். கேணல் நளாயினி, மேஜர்
மங்கை, கப்டன் வாமன், கப்டன்
லக்ஸ்மன் ஆகியோரால்
மூழ்கடிக்கப்பட்ட 'சாகரவர்த்தனா'.

U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
Gold Gasse-8, 7000 Chur
SWITZERLAND
Tel/Fax: 077-816609

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943

Printed by Observer Group Newspapers.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்